Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்:-பத்து

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
## The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 16 செவ்வாய்க்கிழமை (02.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 257

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு சுவிஸ் அமைச்சருடன் சந்திப்பு

(பொன்)

சுவிற்சர்லாந்து சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் சுவிஸ் வெளிநாட்டு அமைச்சர் மற்றும் அமைச்சு அதிகாரிகளை நேற்று சந்தித்துப்பேச்சு நடத்தினர்.

இப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுவிற்சர்லாந்து அரசின் சார்பில் அந்நாட்டு வெளிநாட்டமைச்சரும், அமைச்சு உயர் அதிகாரிகளும் இலங்கைக்கான தூதுவர் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய நேரப்படி நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமான இப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை, இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பரிஸில் சட்ட வல்லுநர்களினால் தயாரிக்கப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## இணுவில் பகுதி தோட்ட கிணற்றில் சிசுவின் சடலம்

(ஏழாலை)

இணுவில் பகுதியிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இணுவில் தியேட்டருக்கு முன்னாலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசியதையடுத்துப் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் நேற்று நண்பகல் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

சுன்னாகம் பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-12)

# புலிகள் முன்வைக்கும் திட்டவரைபை அரசு இந்தியாவுக்கும் அனுப்பும்!

## இராஜதந்திரிகள் ஆரூடம்

(நமது நிருபர்)

**பரிஸில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்டுவரும் இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபை அரசிடம் சமர்ப்பிக்கும் போது அதனை அரசு இந்தியாவின் பார்வைக்கு சமர்ப்பித்து அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பின்பே தனது முடிவை புலிகளுக்கு அறிவிக்குமென இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**


தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் சர்வதேச சட்ட வல்லுநர்களும் பரிஸில் கூடி தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைவு

ஏற்றுக் கொள்வதா? விடுவதா? என்பதை இலங்கை அரசு தீர்மானிக்கும் எனவும் அந்த இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமஷ்டி அமைப்பு முறையிலான

சந்தர்பங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளது.

இதே நிலைப்பாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணியும் கொண்டிருப்பதாகக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் மட்டக்களப்பு



# இராஜதந்திரிகள் ஆரூடம்

(நமது நிருபர்)

**பரிஸில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்டுவரும் இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபை அரசிடம் சமர்ப்பிக்கும் போது அதனை அரசு இந்தியாவின் பார்வைக்கு சமர்ப்பித்து அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பின்பே தனது முடிவை புலிகளுக்கு அறிவிக்குமென இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் சர்வதேச சட்ட வல்லுநர்களும் பரிஸில் கூடி தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைவு புலிகளால் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதனை உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்து இந்தியாவின் ஆலோசனைகள் பெறப்படுமெனவும் அதன் பின்பே ஏற்றுக் கொள்வதா? விடுவதா? என்பதை இலங்கை அரசு தீர்மானிக்கும் எனவும் அந்த இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமஷ்டி அமைப்பு முறையிலான அரசமைப்பொன்றை உருவாக்குவதில் அரசு தற்போது தீவிரகவனம் செலுத்தி வருகிறது. அதற்கு இந்தியாவின் தார்மீக உதவி தேவை என இலங்கை அரசு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளது.

இதே நிலைப்பாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணியும் கொண்டிருப்பதாகக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியுமான யோசப் பரராசசிங்கம் புதுடில்லியில் நடைபெற்று வரும் கருத்தரங்கொன்றில் உரை

(10ம் பக்கம் பார்க்க)



நேற்று மட்டக்களப்பில் இருந்து வன்னி சென்ற பெண்போராளிகளை கண்காணிப்புக்குழுவினர் கைலாகு கொடுத்து வரவேற்கின்றனர்.

# எவரது வற்புறுத்தலுக்கும் கூட்டணி அடிபணியாது

## இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

எவரது வற்புறுத்தலின் பேரிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழினத்தின் விடிவுக்குமாறாக ஒருபோதும் செயற்படமாட்டாது. இவ்வாறு கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகவே கூட்டணி எம்.பிக்கள் தாளம்போடுகிறார்கள் என்ற சாரப்பட யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்துத் தொடர்பாகவே இரா.சம்பந்தன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணி

(10ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் இருந்து 100 பெண் போராளிகள் வன்னிக்குச் சென்றனர்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் 100 பெண் போராளிகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் படைப்பிரிவின் விசேட தளபதி நிலாவினி தலைமையில் நேற்றுக் காலை மட்டக்களப்பில் இருந்து தரை மார்க்கமாக வன்னிக்குச் சென்றுள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடனும் இராணுவத்தினரின் பாதுகாப்புடனும் இவர்கள் வன்னி சென்றிருப்பதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் படைப்பிரிவின் விஷேட தளபதி நிலாவினி தலைமையில் சென்ற பெண் போராளிகளைச் செங்கலடி கறுத்தப்பாலத்தில் வைத்து கண்காணிப்புக் குழுவின

(10ம் பக்கம் பார்க்க)

# மின்சாரம் தாக்கியதில் இளைஞன் பரிதாப மரணம்

## யாழ்.கோட்டைப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 6 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் மீனாட்சி அம்மன் கோவில் கோட்டை வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை சுரேந்திரன்(வயது 28) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

பிரஸ்தாப நபர் பழுதடைந்த டெக் ஒன்றைத் திருத்தி விட்டு மின் இணைப்பைக் கொடுத்த போது அது இயங்கவில்லை. இதனால் மின் இணைப்பில் தவறு இருப்பதாகக் கருதி அதனைச் சீர் செய்ய முற்பட்ட போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதால் அவ்விடத்திலேயே அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

(த-7)

**மாகாண சபைத் தேர்தல்**

# ஐ.தே.கட்சியுடன் ஸ்ரீ.மு.காங்கிரஸ் பேச்சு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொள்வது தொடர்பான பேச்சுக்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவீராவுடன் நடத்தி வரும் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் ஹக்கீம் கேட்டுக் கொண்டுள்ளார்.

(வ)

# நிரந்தர நியமனம் கோரி

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நேற்று முதல் மறியல் போராட்டம்

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கில் உள்ள பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணிபுரிவோர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக நேற்று முதல் மறியல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இம் மறியல் போராட்டத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பிரதேசங்களில் இருந்து நூற்றுக் கணக்கான பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

இவர்களது மறியல் போராட்டத்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## செயல்திறன் அரங்க இயக்கம் நடாத்தும் சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி

சிறுவர் உளநல மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தாக கருப்பொருள் அமைதல் வேண்டும்.

**அறிவித்தல்**

- படைப்புகள் முன்பு மேடையேற்றப்பட்டதாகவோ, பிரசுரிக்கப்பட்டதாகவோ, போட்டிகளில் பரிசு பெற்றதாகவோ இருக்கக் கூடாது.
- 30 நிமிட ஆற்றுகைக்குரியதாக இருக்க வேண்டும்.
- சிறுவர் பார்வையாளர்களுக்காக எழுதப்படல் வேண்டும்.
- 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்ற முடியும்.
- படைப்பாளியின் சுயவிபரம் இணைத்தல் வேண்டும்.
- தகுதிகாண் எழுத்துருக்கள் அனைத்திற்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
- தெரிவுசெய்யப்பட்ட நாடகங்கள் செயல்திறன் அரங்க இயக்கத்தினால் தயாரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

முடிவுத் திகதி:- 25.09.2003

பரிசில்கள்:-
1ம் இடம் ரூ.3000.00
2ம் இடம் ரூ.2000.00
3ம் இடம் ரூ.1000.00

அனுப்பவேண்டிய முகவரி:-
செயல்திறன் அரங்க இயக்கம்
"அருளகம்", ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[C/6604]


## கிராமிய விளையாட்டுப் போட்டி

(ஆனைக்கோட்டை)

சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் கிராமிய விளையாட்டுப் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு நிலையத் தலைவர் சி.ஞானசேகரன் தலைமையில் நிலைய விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-201)


## கண்ணீர் அஞ்சலி

எமது மதிப்புமிகு விரிவுரையாளர்
திரு.தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின்
அன்பு மாமனார்

**முருகேசபிள்ளை கதிர்காமசேகரம்**

(இளைப்பாறிய அதிபர், அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

அவர்கள் கடந்த 30.08.2003 அன்று காலமாகிவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா*
*இறுதியாண்டு மாணவர்கள்,*
*இணைப்பாளர், விரிவுரையாளர்கள்*
*(மானிப்பாய் இந்துக் கல்லூரி)*

(C/6607)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

*முகாமைத்துவ கற்கையியல் வணிகபீடப் பரீட்சைகள் – 2003*

பின்வரும் பரீட்சைகள் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறும்.

1. முதலாம் வருட தொழில் நிர்வாகமாணி/வணிகமாண 2ம் இடை அரையாண்டு பரீட்சை -08.09.2003
2. தொழில் நிர்வாகமாணி/ வணிகமாணி பகுதி - II 2ம் அரையாண்டு பரீட்சை - 16.09.2003

(C/6603) பதிவாளர்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## அறிவித்தல்

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான கலைப்பீட விரிவுரைகள் 08.09.2003ம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு கலைப்பீடப் பரீட்சைகள் 16.09.2003ம் திகதி ஆரம்பமாகும்.

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான விவசாயபீட விரிவுரைகள் 08.09.2003ம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். இடைநிறுத்தப்பட்ட விவசாயபீடப் பரீட்சைகள் யாவும் 15.09.2003ம் திகதி மீள ஆரம்பமாகும்.

(C/6605) பதிவாளர்.



## இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
## பனை அபிவிருத்திச் சபை
## பதவி வெற்றிடங்கள்

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது முகாமையாளர்
2. ஆராய்ச்சி உத்தியோகத்தர்
3. கணக்காளர்
4. செயலாளர்
5. சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்
6. உற்பத்தி உத்தியோகத்தர்
7. விரிவாக்கல் உத்தியோகத்தர்

மேலதிக விபரங்களை பனை அபிவிருத்திச் சபை 244 காலி வீதி கொழும்பு 04 அல்லது பனை அபிவிருத்திச் சபை 53 கண்டி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 30.09.2003**

*தலைவர்,* தொலைபேசி இல.- 01-2586820
*பனை அபிவிருத்திச் சபை,* - 01-2589185
*30.08.2003* - 021-2222034

(C/6602)



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ். மாவட்டம்

## செப்ரெம்பர் 1 தொடக்கம் செப்ரெம்பர் 7 வரை

**மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொதுமக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்**

- ☒ நாங்கள் செல்லும் இடங்களுக்கு முன்னர் பாவித்த பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.
- ☒ நாம் புதிய இடங்களுக்குச் செல்லும் போது, அவ்விடத்தின் மிதிவெடி அபாயம் பற்றி அப்பிரதேசவாசிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம்.
- ☒ எமது பிரதேசத்துக்குள் புதிதாக வருபவர்களிற்கு எமது பிரதேசத்தின் பாதுகாப்பு நிலை பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்போம்.
- ☒ மீளக் குடியமரும் பிரதேசமாக இருப்பின், அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதிசெய்து மீளக்குடியமருவோம்.
- ☒ இனம்புரியாத மர்மப் பொருட்களைக் கண்டால் உரிய இடங்களுக்கு அறிவிப்போம்.
- ☒ மிதிவெடிகள், வெடிபொருட்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உள்ள இடங்களிற்குள் நுழையாமலும், அபாயப் பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவோம்.
- ☒ மிதிவெடி, வெடிப்பொருட்களின் பாதிப்புக்களை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்போம்.







(C/6601)

**ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்**

**மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்**

## சாரணியர் சமாதானஊர்வலம்

(மன்னார்)

சமாதானம் வேண்டி மூவின சாரணியர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் மன்னாரில் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மன்னார் புனிதசபேரியர் தேசிய பாடசாலையில் இருந்து ஆரம்பித்த இந்தச் சமாதான ஊர்வலம் மன்னார் மருத்துவமனை மற்றும் அரச செயலகம் ஆகியன அமைந்துள்ள பாதையூடாக சென்று மீண்டும் மேற்படி பாடசாலையை சென்றடைந்தது. (உ-10)

## தென்னாசிய பிரதான சுற்றுலா மையமாகக் காலி

(கொழும்பு)

தென்னாசியாவின் பிரதான சுற்றுலா இடங்களில் ஒன்றாக காலி நகர் மாற்றியமைக்கப்படவுள்ளது.

இம் முயற்சியின் மையப்புள்ளியாக காலிக்கோட்டை அமையும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலிநகரும்,கோட்டையும் இப்போதும்சுற்றுலா இடங்களாக விளங்குகின்றன.தற்போது கோட்டையுள் அமைந்திருக்கும் அரச அலுவலகங்கள்யாவும் வேறு இடங்களுக்கு மாற்றப்படவுள்ளன.

காலி நகரை சுற்றுத்தளமாக மாற்றுவதற்கு உள்ளூர்,வெளியூர் முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர் என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## கொள்ளையர் ஐவர் கைது

திக்குவளைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றில் இருந்த பெறுமதிமிக்க பொருள்களைக கொள்ளையடித்துக் சென்று கொண்டிருந்த 5பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். வான் சாரதியையும்,நடத்துநரையும் தாக்கிவிட்டு, வானில் இருந்த பொருள்களையும், வானையும் கடத்திச் செல்முற்படுகையிலேயே பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் திக்குவளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (தி)

# பொங்குதமிழ் நிகழ்வுக்குப் போடும் தடை

# எமது சமாதான ஆர்வத்தை உடைத்தெறியும்

## வவு.வெகுஜன அமைப்புகள் பிரதமருக்கு எச்சரிக்கைக் கடிதம்

(கிளிநொச்சி)

வவுனியாவில் முன்னெடுக்கப்படவுள்ள பொங்குதமிழ் ஏற்பாட்டிற்குப் படையினர் போட்டுவரும் முட்டுக் கட்டைகளைக் கண்டித்து அம் மாவட்டத்தின் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வவுனியாவில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வையொட்டிப் பொது மக்களால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆரம்பக் கூட்டம் கடந்த 18ஆம திகதி வவுனியாவில் உள்ள சுத்தானந்தா இந்து இளைஞர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பெருமளவு பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

கடமை நாட்கள் தவிர்ந்த விடுமுறை நாளில் இக்கூட்டம் நடைபெற்ற போதும், கலந்துகொண்ட அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு இக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் என விளக்கம் கேட்டு திணைக்களத் தலைவர்களுக்கு வவுனியாப் படைக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரினால் கடிதம் அனுபப்பட்டுள்ளது.

நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதற்காக தமிழர் தாயகத்தில் பொங்குதமிழ் நிகழ்சசிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், தெற்கில் சமாதானத்தை முறியடிக்கக் கூடிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்று வருவதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

மேலும் இந்த அரசு எத்தனையோ கோடி பணத்தையும், பொருட்களையும் விரயம் செய்து, நிரந்தர சமாதானத்தை வேண்டி ஊர்வலங்களையும் வேறு நிகழ்வுகளையும் நடத்திவருகின்றது.

இது வெறும் கண்துடைப்பா? என எண்ணத் தோன்றுகின்றது.

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்விற்குத் தாங்களே தனிப்பட்ட சிறப்புப் பிரதிநிதியாக ஒருவரை அனுப்பி அந்நிகழ்வினைச் சிறப்பித்தமையை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

ஆனால், மாவட்டத்திற்கு மாவட்டம் வெவ்வேறு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

உண்மையான, நிரந்தர சமாதானதிற்காக மக்கள் உணர்ச்சிபூர்வமான தியாகங்களைச் செய்து பல முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் இந்த வேளையில், வவுனியாவில் படையினர் பொதுமக்களைப் பயமுறுத்தி அவர்களின் இயல்பு வாழ்க்கையில் வீணாகத் தலையிட்டு அவர்களைத் தொந்தரவு செய்வதன் மூலம், சமாதான ஒப்பந்தத்தை மீறி மனிதவுரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர்.

இச்செயற்பாட்டினை வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன், நிரந்தர சமாதானத்திற்காக எக்கோணத்தில் இருந்தும் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புமக்களை ஊக்குவிப்பதற்கு மாறாக, மிரட்டல், பயமுறுத்தல் என்ற செயல்களில் இருந்து விலகி முழு சமூகமும் எதிர்பார்த்து நிற்கும் நிரந்தர சமாதானத்திற்காகப் பாடுபட முன்வர வேண்டும்.

எனவே, இத்தகைய மாறான செயற்பாடுகள் மீண்டுமோர் போர் மேகத்தை உருவாக்கும் என்பதை கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரின் செயற்பாட்டுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என எமது ஒன்றியம் தங்களைக் வேண்டி நிற்கின்றது என்றுள்ளது. (உ-10)

## ஆங்கிலக் கல்வி அபிவிருத்திக்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பாடசாலைகளின் ஆங்கிலக் கல்வி அபிவிருத்திக்கென அரசாங்கம் 100 கோடி ரூபாவை ஒதுக்கவுள்ளது. கல்வி அமைச்சின் இருமொழி விருப்புத் திட்டத்தின் கீழ், இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இருமொழி விருப்புத் திட்டம் தற்போது 168 பாடசாலைகளில் அமுலில் உள்ளது.

இரு சமூகங்களின் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் முயற்சியாக சிங்களமும், தமிழும் கட்டாய பாடமாகக் கற்பிக்கப் படவுள்ளன.

இனங்களுக்கிடையேயுள்ள இடைவெளியை நீக்குவதற்கு இரண்டாவது மொழியைக் கற்றுக் கொள்வது இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# தமிழ்க் காவல்துறையின் சேவை

# யாழ். மாவட்டத்திற்குத் தேவை

## யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்காப் பொலிஸாரின் சட்ட. நடவடிக்கை, ஒழுங்குகள் என்பன இம் மண்ணில் விசனத்திற்குரியவை. மாறாக எமது மொழி, உறவுகளைப் பேணும் தமிழ்க்காவல்துறையின் சேவை எமக்கு வழங்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்டச் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் உரிமையாளர்கள், சாரதிகள் நடத்துநர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இருநாள் கருத்தரங்கு கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற போது, இறுதிநாளன்று மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அங்கு மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன,

☛ எமது தனியார் போக்குவரத்தின் தனித்துவம் பேணப்படவேண்டும்.

☛ புரிந்துணர்வு ஒப்பந்தப் பிரகாரம் உயர் இராணுவப் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு அப்பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டு இயல்பு நிலையில் வாகனப் போக்குவரத்து இடம்பெற அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடன் அனைத்து வளங்களும் பெறப்படவேண்டும்.

☛ இத் தனியார் போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் சேவையில் ஈடுபடும் வண்டிகளிற் சில கடந்த காலங்களில் சேவையில் ஈடுபடும் வேளையில் இராணுவ நடவடிக்கை காரணமாக, காணாமற்போய் அன்றி சேதமாக்கப்பட்டு அல்லது எரியூட்டி அழிக்கப்பட்டு இருப்பின் உரிய ஆதாரங்கள் மூலம் அவை உறுதிப்படுத்தப்பட்டு அவற்றிற்கான இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும்.

☛ கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாகக் கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன அல்லது ஊனமாக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள், சாரதிகள். நடத்துநர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான நட்ட ஈடுவழங்கப்படவேண்டும்.

☛ வாகன வரிப் பத்திரம் வழி அனுமதிப் பத்திரம் அற்ற வண்டிகள் அவற்றிற்கான ஆவணங்களையும், உரிமங்களையும் பெறுவதில் ஏற்படும் இடைஞ்சல்கள் தடைகளை நீக்கி அவற்றைப் பெற குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்படவேண்டும்.

☛ பழுதான அல்லது நீண்ட கால அடிப்படையில் திருத்தஞ் செய்த அல்லது செய்யப்படுகின்ற வண்டிகளுக்கு அண்மைக் காலத்தில் ஏற்பட்ட சூழ்நிலைகள், நெருக்கடிகள் மத்தியில் ஆவணங்கள் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்களால் வாகன வரிப் பத்திரம் பெறுவதில் உள்ள அசௌகரிய நிலையைக் கருத்திற்கொண்டு நடப்பு வருடம் முதல் வாகன வரிப்பத்திரம் எடுக்க வகை செய்யவேண்டும்.

☛ கடந்த காலத்தைப் போலல்லாது எமது பிரதேசங்களில் விபத்துக்குள்ளாகும் காப்புறுதி பெற்ற வண்டிகளுக்கு காப்புறுதி நிறுவனங்கள் உரிய நட்டஈட்டை வழங்கி உதவ உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

☛ சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதில் உள்ள தடைகள் - இடர்கள் அகற்றப்பட்டு தகுதியுள்ள சாரதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க ஆவன செய்ய வேண்டும். (உ)

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள்

(சுதுமலை)

நீரிழிவு நோயால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை இலங்கையில் வலுவேகமாக அதிகரித்துவருகின்ற காரணத்தினால்,அதனைக்கட்டுப்படுத்தும் வகையில் விழ்ப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எச்.ஏ.ஹேகாந்தல நாயக்க சகல வைத்தியசாலைப் பணிப்பாளர்கள், பொறுப்பதிகாரிகள், மாகாண சுகாதார வைத்தியப் பணிப்பாளர்கள் ஆகியோரை சுற்றறிக்கை மூலம் கோரியுள்ளார்.

அச் சுற்றறிக்கையில் ,

நீரிழிவு நோய் ஆரம்பத்தில் இனங் காணப்பட்டால் அதைத் தடுப்பது இலகுவானது. இல்லையேல் நாளடைவில் அதனால் பாரிய விளைவுகளான இதயநோய்கள், நரம்புதொடர்பான பிரச்சினைகள் என்பன ஏற்பட்டு மரணம் சம்பவிக்கக் கூடிய சந்தர்ப்பமும் உண்டு.

எனவே,இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வெளிக்களங்களிலும் சிகிச்சை நிலையங்களிலும் விழிப்புணர்வுப் பிரசார நிகழ்வுகளை ஏற்படுத்த வேணடும்.

வைத்தியசாலைகளில் நீரிழிவுச் சிகிச்சை நிலையங்களை நல்ல முறையில் நடாத்தி, நோயை இனம் கண்டு உரிய சிகிச்சை வழங்க வேண்டும்.

இந்நோய்களிற்கு,தினமும் இலகுவில் மருந்து பெறுவதற்கு அல்லது சிகிச்சை பெறுவதற்கு வைத்திய சாலைகளில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

உணவின் அளவு, சீனியின் பாவனை, போதுமான உடற்பயிற்சி, நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்கள், உடற்பருமனை குறைப்பது போன்ற விடயங்களில் போதிய விழிப புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனக்கேட்கப்பட்டுள்ளது. (உ-252)

## வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நிறைவு

# பாடுபட்ட அனைவர்க்கும் பல்கலை

# ஊழியர் சங்கம் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிகரமாக முடிவுக்கு வந்திருப்பது குறித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று முன்தினம் ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

01.01.2004 முதல் புதிய சம்பளத் திட்டத்தினை அமுல் செய்ய ப.மா.ஆ.குழு உடன்பட்டுள்ளது. இடைக்கால நிவாரணமாக ஓகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் ரூபா 5 ஆயிரம் ரூபாவினை ஊழியர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 3 ஆயிரத்து 300 ரூபா ஓகஸ்ட் மாத சம்பளத்துடன் வழங்கப்படும். குறைந்த. சம்பள நிலையான A10 முதல் A15 வரையிலுள்ள ஊழியர்களுக்கு செப்ரெம்பர் முதல், டிசம்பர் வரை மாதம் தலா 150ஐ வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தவிர சம்பள உயர்வு குறிப்பிட்ட சில சம்பளத் தரங்களில் உள்ளவர்களின் சம்பள முரண்பாடுகளும் தீர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில மற்றும் விளையாட்டுப் போதனாசிரியர்கள் உள்ளிட்ட வேறு சில தரப்பினருக்கு 1998 இல் சம்பள மாற்றத்தின்போது கழிக்கப்பட்ட தொகை மீள வழங்கப்படவுள்ளது. ''Non Acdemic Staff'' என்ற பதம் ''University Support Staff'' என மாற்றப்படவுள்ளது. வேறு சில நன்மைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தொடச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் நேரில் சமுகமளித்தும், அறிக்கையினை வெளியிட்டும் எமக்கு ஆதரவு நல்கிய மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவா சு.பரமநாதன்,வங்கி ஊழியர் சங்கப் பிரதிநிதி சிவபாலன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோகணேசன், அ.விநாயகமூர்த்தி, சோசலிச சமத்துவக் கட்சி மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் தொழிற்சங்க அமைப்புக்களைச் சார்ந்தவர்கள், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் எம்முடன் இணைந்து போராடிய யாழ். பல்கலைக் கழக எழுவினைஞர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒன்றியம் மற்றும் வெகுஜன ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் ஊழியர் சங்கம் எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறது என்றுள்ளது. (உ)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக

# மலேசியப் பிரதிநிதி ''நிக்'' யாழ்.குடாநாடு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மலேசியப் பிரதிநிதி''நிக்'' அண்மையில் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்து குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேலைத் திட்டங்களை நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

''நிக்கோட்''நிதி அனுசரணையுடன நாவாந்துறையில் அமுல்படுத்தப்படும் 130 வீட்டுத் திட்டம்,

''நியாப்''நிதி அனுசரணையுடன் வடமராட்சியில் அமுல்படுத்தப்பட்டுள்ள குளங்கள் புனரமைப்புத் திட்டம் முன்பள்ளித்திட்டம் என்பவற்றை இவர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அத்துடன்,தெல்லிப்பழை மனநோயாளர் வைத்தியசாலைக்கும் இவர் விஜயம் செய்திருந்ததாக தமிழர்புனர்வாழ்வுக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-16)

(உ-16)

# இந்து கலாசார அமைச்சரின் சிபார்சில்

# 142 பேருக்கு சமாதான நீதிவான் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் சிபார்சின் பேரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 142 பேரை நீதி நிர்வாக 'கட்டமைப்பு அமைச்சு சமாதான நீதிவான்களாக நியமித்துள்ளது.

இந்நியமனம் பெற்றவர்களின் பெயர், விபரங்கள் வருமாறு:-

எஸ்.அன்ரனி - 20, மவுண்கார் மேல் வீதி, குருநகர், எம்.ஆறுமுகம் -. பெரிய கிணற்றடி, பொலிகண்டி, வி.மகேந்திரன் - துன்னாலை கிழக்கு கரவெட்டி, எஸ். சிவராசா - துன்னாலை தெற்கு, கரவெட்டி, ரி.விமலேஸ்வரன் - நவாலி கிழக்கு, மானிப்பாய், ரி.ஐயாத்துரை - இங்கராபதி தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

ரி.நாகரட்ணம் - 51, . வைமன் வீதி, நல்லூர், வி.தவச்செல்வம் - மாமுனை வடக்கு, செம்பியன் பற்று, அம்பிகாநிதி - வரணி வடக்கு, கணபதி ராஜேந்திரம் - வதிரி, அல்வாய் தெற்கு, எஸ். தங்கராசா - முருகையன் கோவிலடி நெல்லியடி, கரவெட்டி.

எஸ்.கணபதிப்பிள்ளை - நவிண்டில், கரவெட்டி, வி.ஆரியராசா - பொத்தியன்காடு, தொண்டமனாறு, வி.சிவசுப்பிரமணியம் - ஓடை அல்வாய் தெற்கு, எஸ்.இராசநாயகம் - சந்தை வீதி, ஆவரங்கால், எஸ்.மோகனதாஸ் - சந்நிதியான் ஆசசிரம், தொண்டமனாறு, என். பத்மநாதன் - வதிரி, கரவெட்டி, கே.புருஷோத்தம குருக்கள் - வல்லிபுர ஆலயம், துன்னாலை வடக்கு, கரவெட்டி.

வி.சிவசுப்பிரமணியம் - திருமகள் சோதி வீதி, நெல்லியடி, கரவெட்டி.

கே.யோகநாதன் - கரணவாய் தெற்கு, கரவெட்டி, சி.சிவமூர்த்தி - சிவகிரி, கரவெட்டி வடக்கு, பி. இராதாகிருஷ்ணன் - நெல்லியடி வடக்கு, என்.சபாநாயகம் - ஆனந்த பவனம், மாலுசந்தி, கரவெட்டி, எஸ்.தயானந்தன் - 15ம் தபால் கட்டையடி, உடுப்பிட்டி, எம்.நகுலராஜ் - அம்பன், குடத்தனை, எம். சுந்தரலிங்கம் - சதபொண்ஸ், அல்வாய் கிழக்கு, கே.மகேந்திரம் - இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி. எம். ஆனந்தராஜன் - தெய்வீகம், கவிஞர் செல்லையா வீதி, அல்வாய். திரு.பி.கணபதிப்பிள்ளை - மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு, அல்வாய், கே.சிவபாதசுந்தரம் - இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி, கே.விநாயகமூர்த்தி - நாவலர் மடம், கரவெட்டி.

கே.குணரட்ணம் - நவிண்டில், கரணவாய், கரவெட்டி, எஸ்.விஜயகுமார் - பிள்ளையார் கோவிலடி. நெல்லியடி, கரவெட்டி, ஆர்.ஜெகநாதன் - கற்கோவளம், பருத்தித்துறை, ஏ.ஜெயக்குமார் - கற்கோவளம், பருத்தித்துறை, என்.சந்திரசேகரன் - கற்கோவளம், பருத்தித்துறை, ரி.சிவராசா - சிவன் வீதி, ஆவரங்கால், எஸ்.கணபதிப்பிள்ளை - நவிண்டில் கரவெட்டி, பி.செந்தில்செல்வன், பழைய வளவு, நெல்லியடி வடக்கு, வதிரி, கரவெட்டி, வி.நடராஜக் குருக்கள் - சிவன் கோவில் வீதி, ஆவரங்கால்,வ.சுதாகரன் - கரந்தன் மேற்கு நீர்வேலி, ஏ.அருமைத்துரை - தாஜ் மஹால், அல்வாய் வடக்கு, எம். பிலேந்திரன் - மாவடி வளவு, கரணவாய் வடக்கு, கரவெட்டி, வி.கருணாமூர்த்தி - வல்லிபுரம், புலோலி, எம்.கே.ஜீவகதாஸ் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, கிருபானந்த சர்மா - 82, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், கே.கமலசேகரம் - பெற்றோல் செற் லேன், காங்கேசன் துறை, கே.மயில்வாகனம் - முதலைக் கோவிலடி, வட்டு தெற்கு.

கே.குணரட்ணம் - இக்கிரானை, கந்தரோடை, சுன்னாகம், திருமதி கே.இராஜேஸ்வரி - 14, பால் பண்ணை வீதி, திருநெல்வேலி, எஸ். கலியுகவரதன் - திருவதிகை, சுதுமலை தெற்கு, மானிப்பாய், கே.ஜெயந்தா - 32, மூத்தவிநாயகர் கோவிலடி, நல்லூர், எஸ்.பத்மநாதன் - 14, செல்வபதி, கடுக்காயடி லேன், நல்லூர், எஸ்.ஆம்பிகாவதி - ஆர்.கே.எம்.பார்த்தசாரதி வீதி, கொக்குவில் கிழக்கு, எஸ்.பாலேந்திரன் - வேலணை மேற்கு, வி.விநாயகமூர்த்தி - புளியங்கூடல், ஊர்காவற்றுறை, எஸ்.புலேந்திரராஜ் - எஸ்.ஜே.வி.லேன், கோண்டாவில் கிழக்கு, எஸ்.தங்கராஜ் - நாவலடி லேன், திருநெல்வேலி, எஸ்.சிவசுப்பிரமணியம் - மூளாய் தெற்கு, எஸ்.செல்வசசீவன் - 906, பருத்தித்துறை வீதி, நல்லூர், எஸ். சிவபூரணநாதன் - 255, அரசடி வீதி, கந்தர்மடம், எஸ்.மயூரகிரிநாதன் - நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை, எஸ்.பரஞ்சோதிநாதன் - வேலணை வடக்கு, வேலணை, என்.மகேந்திரன் - வேலணை கிழக்கு, என்.உறரீந்திரக் குருக்கள் - நாவற்குழி, கைதடி, என்.ஞானபாஸ்கரன் - ஜீ. பி.எஸ்.வீதி, கல்வியங்காடு, என். ஸ்ரீரஞ்சன் - அறிவகம், பூதரவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, பி. சிவநந்தன் - வேலைத் தோப்பு, கல்வியங்காடு, பி.இராஜேஸ்வரன் - 257, பலாலி வீதி, கந்தர்மடம், பி.பாலசுப்பிரமணியம் - முடிப்பிள்ளையார் கோவிலடி, வேலணை மேற்கு, வேலணை, பி.தேவகுமார் - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, திருமதி வி.ஜெயராணி - நீர்வேலி மத்தி, வி.ஜெயரத்தினம் - 91, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, வி.நமசிவாயம் - 10, பாடசாலை வீதி, திருநெல்வேலி, ரி.சகாதேவன் - ஜெயமங்கலம், புகையிரத வீதி, கொக்குவில், ரி.பரமேஸ்வரன் - உதவித் தபாலதிபர், கந்தரோடை, சுன்னாகம், எஸ்.கைலைநாதன் - இராஜேஸ்வரக் குருக்கள் - புங்குடுதீவு, என்.வைரவநாதன் - குப்பிளான் வடக்கு, வி.மகாலிங்கம் - சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, எம்.சிவசந்திரபோஸ் - பொஸ்கோ 252, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், எஸ்.மரியராஜ் - 886, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், எஸ்.இரத்தினசிங்கம் - வளர்மதி வண்ணக்கேணி, கண்டி வீதி, பளை.

எஸ்.பாஸ்கரன் - 16, பழம் வீதி, உடையார் லேன், கந்தர்மடம், எஸ். மரியாம்பிள்ளை - 16, நாவலர் வீதி, நாவாந்துறை, எஸ்.சுந்தரேஸ்வரன் - நீலிப்பந்தனை - காரைநகர், எஸ்.திருவாதவூரர் - தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், கியூ.ஆனந்தராசா - 9, பலாலி வீதி, யாழ்ப்பாணம், பி.ஸ்ரீகாந்தன் - வட்டுக்கோட்டை வடக்கு, எஸ்.சிவகுமாரன் - துர்க்கா இல்லம், 11 ஓட்டு மடம் வீதி, வண்ணார் பண்ணை, கே.எச்.விஸ்வநாதன் - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, ரி.தியாகலிங்கம் - 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், எஸ்.சிவபாதசுந்தரம் - 75/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், எஸ்.சண்முகரட்ணம் - கைதடி மேற்கு, எஸ்.விக்கினேஸ்வரநாதன் - வேலணை மேற்கு,எஸ்.வேலுப்பிள்ளை - மீசாலை வடக்கு, கொடிகாமம், கே.வேலாயுதபிள்ளை - தோப்புலேன் மட்டுவில், வடக்கு, சாவகச்சேரி. பி.துஷ்யந்தன் - 65/7, கல்லூரி வீதி, நீராவியடி, கே.கலைச்சந்திரன் - 40/4 புகையிரத வீதி, கிழக்கு லேன், கந்தர்மடம், பி.ஈஸ்வரராஜா - 535/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், எம்.ஸ்ரீநாதன் - 280, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், வி.திருச்செல்வம் - முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி, பி.சிவபாஸ்கரன் - 483, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், ரி.சிவபாலன் - 59, மூத்த விநாயகர் வீதி, நல்லூர், ரி.சிவராசா - 2, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம், வி.கணேசலிங்கம் - 30/13, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், எஸ்.குமாரசிங்கம் - சந்தி லேன், சங்கானை, எஸ்.சிவசங்கர் - 75, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், வி.கம்ஷன் - 19, பிரப்பன்குள வீதி, யாழ்ப்பாணம், ஐயன் தியாகராஜ் - இந்துக் கல்லூரிவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், மருத்துவ கலாநிதி வி.செல்லத்துரை - 37/5, சேர்பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம், ரி.தர்மலிங்கம் - 338, தெய்வன்கேணி வீதி, சரசாலை வடக்கு, சாவகச்சேரி, ஏ.அகுஸ்தீன் - 18 கண்டி வீதி, யாழ்ப்பாணம், கே.தர்மராசா - 100, அரசடி வீதி, கந்தர்மடம், கே.ரட்ணராஜா - கோப்பாய் மத்தி, கோப்பாய், எம்.நந்தீஸ்வரன், வேலைத் தோப்பு, கட்டைப்பிராய், எம்.சண்முகராஜா - வேலணை கிழக்கு, வேலணை - 8, எம்.சஸ்ருதன் - உரும்பிராய் மேற்கு, பி.தேவதாஸ்- தென்னிந்தியதிருச்சபை, காரைநகர், வரதராஜசர்மா- 958A/2,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எஸ்.இளங்கீரன்- 134,(276) மெயின் வீதி,யாழ்ப்பாணம், கே.சிவயோகராணி-பாடசாலை வீதி,சித்தன் கேணி, எஸ்.செல்வராஜ்-கைதடி வடக்கு, பி.தேவராஜ் -செட்டியார் மடம், அராலி வடக்கு, . வட்டுக்கோட்டை, ரி.குகநேசன் -கோயில் வீதி, மல்லாகம், ரி.திருநாவுக்கரசு சிவநாதன்- 3ம் வட்டாரம் புங்குடுதீவு, ரி.ரவீந்திரன்- நாக்லிங்க சுவாமிகள் வீதி, சங்கானை ரி.ராசேந்திம்- 28.பொற்பதி வீதி, கொக்குவில், ரி.சீவரட்ணம்- 142பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், வி.சேவியர்.ஜின்ஜின்ஸ்ரைன் - 31, மத்திய கிழக்கு வீதி,யாழ்ப்பாணம், வி.யோகலிங்கம்- 47,அடப்பன்குள வீதி, யாழ்ப்பாணம். வி.சிவகுருநாதன்-காந்தன் புளியடி,காரைநகர், ரி.தேவராஜா -303,கே.கே.எஸ்.வீதி ,ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம், ரி.சுந்தரலிங்கம்-சங்கரப்பிள்ளை வீதி,யாழ்ப்பாணம், வி.கந்தசாமி-காஞ்சிபுரம், மாதகல், எஸ்.வைரவநாதன்- காஞ்சிபுரம். மாதகல், ரி.சற்குணராசா- 530,பலாலி வீதி, யாழ், ரி.பரராஜசிங்கம்- சின்ன ஆலடி, காரைநகர், ரி.விமலேஸ்வரன் - நவாலிகிழக்கு, மானிப்பாய், ரி.நாகரெட்ணம் - 51,வைமன்வீதி, நல்லூர், கந்தையா சிவலிங்கம், 56/5,ஓட்டு மடம் வீதி, யாழ்ப்பாணம், துரைசாமி குருநாதசிவம்- 116,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் ,கார்த்திகேசு- நித்தி யானந்தன்- 1ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

இவர்கள் தமது நியமனக் கடிதங்களை பலாலி வீதியில் அமைந்துள்ள அமைச்சரின் இல்லத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலக சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார். (உ)

## யாழ்.பல்கலைக்கழக முழுநேர

# பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவுக்கு 32பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக 2002/2003 கல்வியாண்டில் முழுநேர உள்ளக பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்வதற்கு 32பேர் தெரிவாகியுள்ளனர்.

அவர்களின் பெயர்,விபரங்கள் வருமாறு,

பி.மகாலிங்கசிவம்- யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
எஸ்.இளங்கோ-யா/உயரப்புலம் ம.ம.வித்தி
பி.அம்பிகைதர்சினி-வவு/இரம்பைக்குளம் மகளிர் ம.வித்தி.
ரி.செல்வநந்தினி-தி/நிலாவெளி தமிழ் கலவன் வித்தி.
ஜே.கிறிஷா ஜோவிதா-கொ/மட்டக்குளிய சென்.ஜோன்ஸ் ம.வித்தி.
எஸ்.கருணாகரன்-யா/பருத்தித்துறை வேலாயுதம் ம.வித்தி.
ஏ.ஆனந்தம் குறுஸ்-ம/வங்காலை சென்.ஆன்ஸ் ம.ம.வித்தி.
ஜி.லலிதபரமேஸ்வரி-தி/ஒறிஸ்ஹில் விவேகானந்தா கல்லூரி.
எஸ்.சற்குணேஸ்வரன்-ம/சென். சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை
வி.பாலபத்மினிதேவி-கிளி/தருமபுரம் மகாவித்தி.
எவ்.மேரி மன்றேசா-யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
கே.சிவதிரன்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி
ஆர்.கோகுலரங்கன்-யா/அச்செழு சிவப்பிரகாச வித்தி.
ஆர்.இராஜேஸ்வரன்-யாழ். மத்திய கல்லூரி
எம்.கௌரி-யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.
எஸ்.ஞானரதன்-ம/சென் சேவியர் ஆண்கள் கல்லூரி
எஸ்.நிர்மலாதேவி-தி/ஒறிஸ்ஹில் விவேகானந்தாக் கல்லூரி.
ரி.உதயசூரியன்-கிளி/புன்னைநீராவி அரசினர் த.க. பாடசாலை
யோகராணி-யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வித்தி.
எம்.மூர்த்தி-தி/மூதூர் சேனையூர் மத்திய கல்லூரி
ஜி.ஐங்கரன்-யா/ஸ்கந்தவரோதய கல்லூரி
எஸ்.யோகேஸ்வரா-யா/இணுவில் மத்திய கல்லூரி
ரி.காஞ்சனா-யா/திருநெல்வேலி முத்துத்தம்பி ம.வித்தி.
சற்.அப்துல் ஜபீர்-கல்முனை ஷாஹிறாக் கல்லூரி
என்.சூரியகுமார்-யா/வட்டு.இந்துக் கல்லூரி
எஸ்.மணிவதனி-யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி
என்.மகேந்திரன்-யா/அளவெட்டி அருணாசலம் வித்தி.
என்.விஜயசுந்தரம்- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
எம்.சுஜிதா-யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி.
எம்.விக்னேஸ்வரன்-யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி
எஸ்.சுலோசனா-யா/இணுவில் மத்திய கல்லூரி
எஸ்.பிறேமநளினி-யா/இணுவில் இந்துக்கல்லூரி. (பி)

# அனுமதிப்பத்திரம் இல்லாத சாரதிகள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி கடமையில் ஈடுபடும் பஸ்சாரதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்நடவடிக்கை உடனடியாக அமுல் படுத்தப்படும் என போக்குவரத்துச் சபைத் தலைவர் ஏ.வி. தலங்குனே தெரிவித்துள்ளார்.

500ற்கும் மேற்பட்ட பஸ்கள் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடுவதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும்.

இதனை அடுத்தே,போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,இவ்விடயம் தொடர்பாக அவர் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைத்துள்ளார். (தி)

## வடக்கு~கிழக்கு மாகாணத்தை

# இரண்டாக பிரிக்கும் ஜனாதிபதியின் முயற்சிக்கு இடதுசாரிக் கட்சிகள் கடும் ஆட்சேபனை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சிறுபான்மைக் கட்சிகளும் முன்னணி இடதுசாரிக்கட்சிகளும் வடக்கு-கிழக்கு மாகாணத்தை தனித்தனியாக பிரிக்கும் ஜனாதிபதியின் யோசனைக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

சமாதானத்திட்டம் இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தை அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்பட்டுவருகின்றது என்று ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது எதிர்ப்பை வெளியிட்ட பின்னர் புளொட்,ஈ.பீ.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகியனவும் கூட்டறிக்கை மூலம் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இதேவேளை, 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப் இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பயன்படுத்தி எடுக்கப்படக்கூடிய அரசியல் தீர்வு எதனையும் தாம் எதிர்க்கப்போவதில்லை என தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கையும்-கிழக்கையும் தனித்தனியாக பிரிப்பது பொறுப்பற்ற செயல் என்று இடதுசாரித்தலைவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி தலைவர் வாசுதேவ நாணயக்கார இதுபற்றிக் கருத்து தெரிவிக்கையில்,பிரிப்பதற்கான அர்த்தமுள்ள ஒரு தேவை எதுவும் தற்போது இருப்பதாகக் கூறுவதற்கில்லை. பிரிப்பதற்கு கருத்துக்கணிப்பும் அவசியமாகும்.இதுவிடயத்தால் மேலும் பிரச்சினைகளே உருவாகும் என்று கூறியுள்ளார்.

வடக்கையும், கிழக்கையும் பிரிக்க எடுக்கும் முயற்சிகள் சமாதானத் திட்டத்தை குழப்புவதாகவே இருக்கும். இதனால் மீண்டும் போரே உருவாகும் சூழல் ஏற்படலாம் என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரிக்கும் தொனியில் தனது நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

இது தவிர தீவிரவாதிகளின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி இடங்கொடுக்கக் கூடாது என்று தெரிவித்துள்ள கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் டி.யூ.குணசேகர தனித்தனியாக இரண்டு ஆளுநர்களை நியமிப்பதாயின் அதற்கு பெரும்பான்மையின்ரின் விருப்பு பெறப்பட வேண்டும் எனவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். (உ)

# மேற்கு சீனாவில் கடும் மழை

# 40 பேருக்கு மேல் உயிரிழப்பு

(பெய்ஜிங்)

சீனாவின் மேற்குப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 40பேர் உயிரிழந்துள்ளனர்.

100இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

சீனாவின் மேற்குப்பகுதியான ஷிசூவான் மாகாணத்தில் கடந்த சிலதினங்களாக கடும் மழை பெய்துவருகின்றது.

இதனால்,ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவிகளையும் நிவாரணப் பணிகளையும் சீன அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும்,தொடர்ந்து பெய்து வரும் இக்கடும் மழை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் காலநிலை காணப்படுவதாக சீன வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மேலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக ஷிசூவான் மாகாண அதிகாரிகள் மக்களை எச்சரித்துள்ளனர்.

உலகிலே சனத்தொகை அதிகரித்துக் காணப்படும் நாடாக இருக்கும் சீனாவில், இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அடிக்கடி இடம்பெறும் சுரங்கவிபத்துகள் காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (பி-2)

## விபத்தில் ஒரே குடும்பத்தவர்கள் 19 பேர் பலி

(புதுடில்லி)

இந்திய ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 19 பேர் உயிரிழந்துள்ளனர். ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூர் நகருக்கு அருகாமையிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அதிகளவிலான பயணிகளுடன் சென்ற ஜீப் வண்டி பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 10 பேர் வைத்தியசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (பி-9)

## உண்ணாவிரதத்தில் குதித்தார் மியான்மார் தலைவி சூகி

(ரங்கூன்)

**மியான்மாரில் ஜனநாயகத்திற்காகப் போராடி வருபவரும் எதிர்க் கட்சத் தலைவியுமான ஆங்ஷான சூகி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார்.**

மியான்மார் இராணுவ ஆட்சியாளர்களினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தன்னை விடுதலை செய்யக்கோரியே அவர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதனிடையே சூகியையும் அவருடன் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்யுமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளது.

மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்கள் அங்குள்ள அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்த வேண்டுமெனவும் அமெரிக்க வெளியுறவு



அமைச்சகம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (பி-2)

## நியூயோர்க்கிலிருந்து

## ஐ.நா.தலைமையகத்தை வேறு இடத்துக்கு மாற்றும்படி யோசனை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகளின் சாசனம் மறுசீரமைக்கப்படுமென சர்வதேச சட்ட வல்லுநர்கள் அமைப்பு யோசனை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் தலைமை அலுவலகம் நியூயோர்க்கில் இருந்து மாற்றப்பட வேண்டுமென அந்த அமைப்பு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சாசனம் மறுசீரமைக்கப்படாவிட்டால் அது உலகின் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமான போராட்டத்தில் தமது அமைப்பை ஓரங்கட்டச் செய்துவிடுமென சட்டவல்லுநர்கள் அமைப்பின் தலைவர் அன்ரனி அல்ஜித் கூறியுள்ளார்.

சர்வதேச சட்டவல்லுநர்களின் வருடாந்த மாநாட்டின் போதே அவர்இக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். (பி-2)

## ரூ. 1கோடிக்கு மருந்தும் வாகனங்களும் பலஸ்தீனத்துக்கு இந்தியா வழங்கும்

(புதுடில்லி)

பலஸ்தீனர்களுக்கு ஒரு கோடி ரூபா மதிப்புள்ள மருந்துகளும், 14 டாட்டா வாகன்ங்களும் வழங்குவதாக இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் டாக்டர் நவீல் ஷாகூரை சந்தித்தபோது பலஸ்தீனர்களின் இலட்சியத்திற்கு இந்தியாவின் இடைவிடாத ஆதரவைப் பிரதமர் வலியுறுத் தியதாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறியுள்ளார்.

பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத்திற்கு சமாதானத்திற்கான தனது வாழ்த்துக்களையும் பிரதமர் தெரிவித்துக்கொண்டார்.

மேற்காசிய சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் பற்றிய தமது மதிப்பீட்டை பலஸ்தீனிய வெளியுறவு அமைச்சர் விபரித்தார். அவருடன் வந்திருக்கும் பிரதிநிதிகள் குழு, வெளியுறவு இணை அமைச்சர் விநோத் கண்ணா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. பயங்கரவாதம் குறித்துப் பாரிய அளவில் விவாதம் நடைபெறவுள்ள எதிர் வரும் ஐ.நா.பேரவைக் கூட்டத்தில் நன்கு ஒத்துழைப்பது பற்றி இரு தரப்பினரும் விவாதித்தனர். (பி-2)

## பிறேஸில் நாட்டில்

## சிறுவர்களைக் கொடுமைப்படுத்திய சமயப் பரிஷினர் மீது நடவடிக்கை

(பிறேஸில்)

பிறேஸிலில் உள்ள ஒரு சமயப் பிரிவின் தலைவியும் அவரது ஐந்து சகாக்களும் சிறு பையன்களைக் கடத்திக் சென்று பலியிட்டுக் கொன்றதாக இங்குள்ள நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. மிகத் தூரத்தில் உள்ள அமேசன் நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. பையன்களின் மர்ம உறுப்புகளை முதலில் வெட்டிய பின்னர் பலி கொடுத்துக் கொன்றதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இம்மாதிரியான குற்றங்கள் தொடர்பாக 11 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமான விசாரணைகளின் விளைவாக இந்த வழக்கு இப்பொழுது வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது. பிறேஸில் நாட்டில் ஆங்காங்கே பிரிந்து கிடக்கும் பகுதிகளில் நீதியை நிலைநாட்ட முடியுமா என்பதற்கு இது பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒரு சோதனையாகவிருக்கப்போகின்றது என்று கருதப்படுகின்றது. உளளூர்ப் பிரமுகர்களின் பரம்பரை அதிகாரங்களையும், கட்டுப்பாடுகளையும் தவிர்த்து இந்த விதமான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவது கஷ்டமாகவே இருந்து வந்துள்ளது. இந்த வழக்கின் மூலம் இம்மாதிரியான வேறு பல கொலைகள் பற்றிய தகவல்களும் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இபபடி ஒரு வழக்கு விசாரணை ஆரம்பித்திருப்பதே பெரிய காரியம் என்று அரசாங்கத்தின் மனித உரிமைச் செயலாளர் தெரிவித்தார்.

வலன்ரினா டி அன்ராடே என்ற பெயரைக் கொண்ட ஒருவர் பிரபஞ்ச ஒருங்கிணைப்பு என்ற சமயப் பிரிவின் மிக உயர்ந்த தலைவர் என்று கருதப்படுபவர்.இவருடன் இரு டாக்டர்கள், இரண்டு காவல் அதிகாரிகள் மற்றும் ஒரு வர்த்தகரின் மகன் ஆகியோர் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் 5 சிறுவர்களை கொடூரப்படுத்தியதாகவும், அவர்களில் மூவர் மரணமானதாகவும் இவர் கோரப்படுத்தப்பட்ட போதும் உயிர்தப்பிவிட்டதாகவும் கூறப்படுகின்றது. தப்பிய இவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அன்ராடே தனக்கு ஆவிமூலம் தகவல் கிடைத்துள்ளது என்றும், 1981ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்த ஆண் குழந்கைளுக்குப் பிசாசு பிடித்திருப்பதாகவும் கூறிக்கொண்டார் என பாதிக்கப்பட்ட பையன்களின் குடும்பஸ்தர்கள் தெரிவித்தார்கள். இவ்வாறு அநேக பையன்கள் கொடூரத்துக்குள்ளாக்கப்பட்டதாக அவர்கள் கூறினர். 8க்கும் - 13 வயதிற்கும் உட்பட்ட 19 பையன்களை இவர்கள் பிடித்துக் கொடூரமாக வதைசெய்துள்ளனர். அல்லது கொலை செய்துள்ளனர். சிலரது கண்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. முன் கைகள் முறிக்கப்பட்டுள்ளன. சிலரின் மர்ம உறுப்புகள் அறுககப்பட்டுள்ளன. 19 பேரில் 6 பேர் மரணமாகினர்.1ஹஹ 15பேரைக் காணவில்லை. ஏனையவர்கள் தப்பிவிட்டனர். (பி)

## ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் மூழ்க மனிதத் தவறே காரணம்

### அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை தெரிவிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதற்கு மனிதத் தவறே காரணம் என்று அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ரஷ்யாவின் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல் பிரான்ஸ் கடலில் மூழ்கியது.

இக்கப்பல் மூழ்கும்போது அதில் பயணம் செய்துகொண்டிருந்த 11 பேரில் ஒருவர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். ஏனைய 10 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்ய நேரப்படி சனிக்கிழமை 4 மணிக்கு கடலில் இக்கப்பல் மூழ்கிக்கொண்டிருந்த சமயம் அதில் அணுவாயுதங்கள் எவையும் இல்லை எனவும், எனினும் கப்பல் மூழ்கியதற்கான காரணம் தெரியவில்லை என ரஷ்ய பாதுகாப்புப் பிரிவு அறிவித்திருந்தது.

தற்போது அக்கப்பல் மூழ்குவதற்கு மனிதத் தவறே காரணம் என்றும் ரஷ்ய பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2000 ஆம் ஆண்டு இதே மாதத்தில் ரஷ்ய அணுவாயுதக் கப்பல் பிரான்ஸ் கடலில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 118 பேரும் உயிரிழந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## நேபாள இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மோதல்

### 9 தீவிரவாதிகள் உட்பட 14 பேர் பலி

(காட்மண்டு).

நேபாளத்தில் நேற்று இடம் பெற்ற மோதல சம்பவமொன்றில் 9 மாவோ தீவிரவாதிகள் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

காட்மண்டுவில் இருந்து 880 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கலி மரேகல்ஷே பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினரும், தீவிரவாதிகளும் நேரடியாகத் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டதாகவும், அந்தவேளை தங்களது தரப்பில் 5 பேர் உயிரிழந்ததாகவும் இராணுவத் தரப்புத்தெரிவித்துள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் அந்தப் பகுதி முழுவதிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (பி-2)

## தலிபான் அல்கெய்டா அமைப்புகளுக்கு பாகிஸ்தான் பெரிதும் உதவுகிறது

### அமெரிக்க செய்தி ஊடகம் தகவல்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானின் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் ஒழிந்து கொண்டிருக்கும் தலிபான், அல்கெய்டா அமைப்புக்கள் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட பாகிஸ்தான் பெரிதும் உதவி வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவ வட்டாரங்களையும் மேற்கோள் காட்டி அமெரிக்க செய்தி அறிக்கைகள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்க நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து போராட பாகிஸ்தான் அதிபர்ஜெனரல் முஷாரப் உறுதியளித்ததற்கு இது நேர் மாறாக உள்ளது என அத்தகவலில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாதக் கொடுமை வெற்றிபெற அனுமதிக்க மாட்டோம் அதை ஒழிப்போம் என இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார்.

மத்தியப் பிரதேச கான்ஸா மாவட்டத்தில் உழவர்கள் பேரணியில், உரையாற்றிய அடல் பிஹாரி வாஜ்பாய் அண்மையில் ஸ்ரீ நகரின் மாநிலங்கள் அவையில் மன்றக் கூட்டம் நடந்தபோது, பயங்கரவாதிகளின் ஆத்திரமும் பதற்றமும் அதிகரித்து விட்டதெனக் கூறினார்.

(பி-2)

# செய்தித் துளிகள்

## போககு வரத்திற்கு சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்துசந்தியில் உள்ள வாய்க்கால் உடைந்த நிலையில் உள்ளதால், மானிப்பாய் வீதியினூடாக போக்குவரத்து செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது.

நீண்டநாட்களாக உடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வாய்க்காலை திருத்துவதற்கு உரியவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதும்க்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதியின் வீதியோரங்களில பழைய இரும்புகள் குவிக்கப்பட்டிருப்பதாலும் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-05)

## பாலூட்டும் தாய்மார்க்கு பால்மா

(அராலி)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பாலூட்டும் தாய்மார்க்கு பால்மா வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பால மாவற்கான முத்திரையைப் பெற்றுக் கொள்வதற்குரிய தகுதியான தாய்மார்களைத் தெரிவு செய்வதற்கு வசதியாக சமுர்த்தி உத்தியோகத்தரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-214)

## மஹோற்சவமும் சொற்பொழிவும

(ஏழாலை)

மல்லாகம் நீதியம்பனைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினஙகள் நடைபெற்று வருகிறது.

மேலும் மஹோற்சவ காலத்தில் தினமும் இரவு 8மணிக்கு பிரம்ஸ்ரீ காரை கு.சிவராஜசர்மாவின் 'சமயமும் வாழ்வும்'' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றது.

(க-12)

## அம்பாறை

## வீதிகளைத் திருத்த நிக்கொட் நிதி

(கந்தரோடை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலா பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை முள்ளி கிறவல் வீதி,மானிப்பாய் சகாய புரம் வீதி என்பவற்றின் திருத்த வேலைகளுக்கென நிக்கொட் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-103)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் சமப காலங்களாகத் திருடர்தொல்லை வெகுவாக அதிகரித்து வருவதாக அப்பகுதி பொதுமக்கள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

ஒரேஇரவில் மட்டும் மூன்று வீடுகளில் 3ஆயிரத்து 500ரூபா பணம உட்பட பெறுமதி மிக்க பல பொருட்களும் திருடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டு வந்த போதிலும் திருட்டுக்கள் தொடர்வது குறித்து பலத்த அதிர்ச்சி தெரிவிக்கப்படுகிறது. (க-51)

## நித்திய கரும விதி இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை இந்துமன்றம் எதிர் வரும் விஜயதசமியினை முன்னிட்டு ஆறுமுக நாவலர் தொகுத்து வெளியிட்ட ''நித்திய கரும விதிநூலை'' தீட்சைவைக்கும் ஆலயங்களுக்கு இலவசமாக விநியோகிக்கவுள்ளது. (உ)

## குளம் ஆழமாக்கல்

(கந்தரோடை)

உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடன கந்தரோடை கண்ணகை அம்மன் கோவில குண்டுக்குளம் ஆழமாக்கப்பட்டு வருகின்றது. (உ-103)

## தங்கு மண்டபம் இல்லை

(யாழ்ப்பாணம்)

# குரங்கு பாஞ்சான் குளமுகாமை அகற்ற பிரதமர் ரணில் ஏற்ற நடவடிக்கை

## ஜனாதிபதிக்கு எழுதிய பதில் கடிதத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

கிண்ணியா குரங்கு பாஞ்சானில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுவதற்கு சகலவித நடவடிக்கைகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி முகாமை அகற்றுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சகல அதிகாரங்கயையும் பிரயோகிக்க வேண்டுமெனக் கோரி ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்க கடந்த 21ஆம் திகதி அனுப்பிய கடிதத்திற்கு பதிலளித்து எழுதிய கடிதத்திலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் இவ்விடயம தொடர்பாக நோர்வே அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. நோர்வேயின் விசேடத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்துடன் இது தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்.

இதரப்பினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமையவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

குரங்கு பாஞ்சான்குளமுகாம்போன்று பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரதும், யுதத நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினதும் பொறுப்புகள் குறித்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நோர்வே அரசாங்கத்திற்கு சமாதான நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்கும் அதில் விளக்கங்கள் உள்ளன.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புக கருதி எடுக்கபபட்ட நடவடிக்கைகள் குறித்தும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்குள்ள நிலைமைகள்குறித்து பொலிஸாரும் இராணுவத்தினரும் நன்கு உணர்ந்துள்ளனர். சட்டத்தையும் ஒழுங்கையும் அப்பகுதியில் நிலைநாட்டுவதற்கு அவர்கள் தயாராகவே உள்ளனர்.

தேவை ஏற்படுமானால் பாதுகாப்பு அமைச்சர் மேலதிக விபரங்களை 'ஜனாதிபதிக்கு வழங்கமுடியும்.

நாட்டில் பூரண பாதுகாப்பை நிலைநாட்டும் அதேசமயம், சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்



# முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தனித்துத் தீர்வுகாணமுடியாது

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் தீர்வுகாண வேணடிய பொறுப்பு முஸ்லிம் மக்களின் கைகளில் தான் தங்கியுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான காரணங்களையும், தீர்வுகளையும் அவர்கள் தனித்து நின்று தேடமுடியாது.

முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் நிலையில், முஸ்லிம்கள் புத்தி சாதுரியமாக செயற்படவேண்டிய காலம் வந்து விட்டது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றமையை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் ஆட்கடத்தல்,கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

# உலக ஆசிரிய தினத்தை ஒட்டி

# தமிழ்மொழிமூல ஆசிரியர் மட்டத்தில்

ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினஙகள் நடைபெற்று வருகிறது.

மேலும் மஹோற்சவ காலத்தில் தினமும் இரவு 8மணிக்கு பிரம்ஸ்ரீ காரை கு.சிவராஜசர்மாவின் 'சமயமும் வாழ்வும்'' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றது.

(க-12)

## அம்பாறை அபிவிருத்திக்கு 19 மில்லியன்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள 5 தமிழ்ப்பிரதேச செயலாளர் பிரிவுகளின் அபிவிருத்திக்கென கிழக்கு அபிவிருத்தி அமைச்சு 19மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கல்முனை தமிழ்ப்பிரிவு, காரைதீவு, திருக்கோயில், நாவிதன் வெளி, ஆலையடி வேம்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் உள்ள பாடசாலைக் கட்டடங்களை புனரமைத்தல், வீதிப் புனரமைப்பு, சுகாதாரவசதிகளை மேம்படுத்தல், வடிகால்களை அபிவிருத்திசெய்தல் போன்ற திட்டங்களுக்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

(தி)

## தொலைபேசி இலக்கங்கள் மாற்றம்

(கொழும்பு)

இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுக்காற்று ஆணைக்குழுவினால் மாற்றி அமைக்கப்பட்டுள்ள 10 இலக்கத் தொலைபேசி எண் திட்டத்திற்கு அமைய நேற்று முதல் 16இடங்களுக்கு இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன.

அழைப்பை ஏற்படுத்த வேண்டிய இலக்கங்களுக்கு முன்னால் 22 என்ற எண்ணைச் சேர்ப்பதன்மூலம் புதிய 10இலக்க எண் முறைக்கமைவாக தொடர்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நேற்றைய தினத்திலிருநது வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, ஹற்றன், கல்முனை, நுவரெலியா, நாவலபிட்டி, பண்டாரவளை, பதுளை மற்றும் நீர்கொழும்பு, சிலாபம், கேகாலை, மாத்தளை, அனுராதபுரம், அவிசாவளை, பொலநறுவை ஆகிய இடங்களுக்கே இப் புதியமுறை அமுல்படுத்தப்படவுள்ளது. (க-18)

## ஆழமாக்கல்

(கந்தரோடை)

உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடன கந்தரோடை கண்ணகை அம்மன் கோவில குண்டுக்குளம் ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

(உ-103)

## தங்கு மண்டபம் இல்லை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவில் அருகில் உள்ள இறங்குதுறையில் மண்டபம் இல்லாததால் மக்கள் தங்கி நிற்க இடமின்றி மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் அவதியுற்று வருகின்றனா.

ஊர்காவற்றுறையிலிருந்து அனலைதீவு, எழுவைதீவு ஆகியவற்றிற்கு செல்லும் பயணிகள், படகுகள் நேரத்திற்கு வராது விட்டால் இதனால மிகவும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

(உ)

## சந்தை அமைப்பு இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொதுச் சந்தை கட்டட அமைப்பு இடம்பெயர்வின் பின்பு இடைநிறுத்தப்பட்டடுள்ளது.

இதனால், அரை குறையாக உள்ள இக்கட்டடங்களில் ஆடு, மாடுகள தங்கி அலங்கோலப் படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

( உ)

## உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இவவருட முதல் 7மாத காலப பகுதியில் 2லட்சத்து 60ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 24சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது' என உல்லாசப் பயணத்துறையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உல்லாசப் பயணிகளில் அதிகமானோர் இந்தியா, ஜேர்மன், சுவீஸ்லாந்து ,• அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், யப்பான், பிரிட்டன் , இத்தாலி, நெதர்லாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

(தி)

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான காரணங்களையும், தீர்வுகளையும் அவர்கள் தனித்து நின்று தேடமுடியாது.

முக்கிய பிரச்சினையான இனப்

தொடர்பாக அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தி)

பொலிஸாரும் இராணுவத்தினரும் நன்கு உணர்ந்துள்ளனர். சட்டத்தையும் ஒழுங்கையும் அப்பகுதியில் நிலைநாட்டுவதற்கு அவர்கள் தயாராகவே உள்ளனர்.

தேவை ஏற்படுமானால் பாதுகாப்பு அமைச்சர் மேலதிக விபரங்களை ஜனாதிபதிக்கு வழங்கமுடியும்.

நாட்டில் பூரண பாதுகாப்பை நிலைநாட்டும் அதேசமயம், சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் பாரிய பொறுப்பை நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளன்ர்.

மக்கள் வழங்கியுள்ள ஆணையையும், அரசாங்கத்தின் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் காப்பாற்றுவது எனது பொறுப்பாகும்.

சமாதான முயற்சிகள் மேற்கொளளப்படும் இத்தகைய காலகட்டத்தில் அரசியல் ரீதியில் துரித நடவடிக்கையை மேற்கொள்வது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சரியான அணுகுமுறையாக இருக்க மாட்டாது.

எனவே, பூரண பாதுகாப்புடன் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என பிரதமர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(தி)

### உலக ஆசிரிய தினத்தை ஒட்டி

## தமிழ்மொழிமூல ஆசிரியர் மட்டத்தில் எழுத்தாக்கத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தையொட்டி தமிழ்மொழிமூல ஆசிரியர்களின் தமிழ்மொழி எழுத்தாக்கத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும் தமிழ்வளர்ச்சிக கழகமும் இணைந்து வட-கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவியுடன் வடக்கு-கிழக்கு மற்றும் மலையக மாகாணங்களிடையே தமிழ்மொழி எழுத்தாகக்த் திறன் போட்டித் தேர்வை நடாத்தவுள்ளன.

இத் தேர்தலில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு உலக ஆசிரியர் தினத்தன்று வெற்றிப் பதக்கங்களும் 5ஆயிரம்ரூபா பணப்பரிசு மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டில் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 21வலயங்களிலும் நடத்தப்பட்ட மேற்படி தோவு இம்முறை மலையக மாகாணங்களிலும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ள இப் போட்டித் தேர்வு தொடர்பான விளக்கங்களும் வேண்டுகைபபடிவங்களும் வலயக் கல்விப் பணிமனைகளூடாகப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக வேண்டுகைகளை வலயக்கல்விட் பணிமனைஹாடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-07)

### பாடசாலை மாணவர்களுக்கு

## அடுத்தவாரம் முதல் காலை ஆகாரம்

(கொழும்பு)

சிசுசவியத் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் முதல் மேலும் 50ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்படும் மாணவர் ஒவ்வொருவருக்கும் தலா 500ரூபா வழங்கப்படும் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் ஏற்கனவே 20 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்றும்,

பாடசாலை மாணவர்களுக்கான காலை உணவை வழங்கும் முறை மீணடும் அறிமுகப்படுத்தப்படும் என பிரதமர் உறுதியளித்துள்ளதாகவும் கல்விஅமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் முதறகட்டம் அடுத்தவாரம் மதுரகிரியாவில் ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(தி)

### பாடசாலை மாணவர்களுக்கு

## பொதுஅறிவு நுண்ணறிவு தேடலிற்கான பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தால் மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு வளர்ச்சிக்காக பொதுஅறிவு, நுண்ணறிவு தேடலிற்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இச் செயல்திட்டமானது தரம் 6 தொடக்கம் தரம்- 13வரையான பாடசாலை மாணவர்களிடையே கடந்த 25ஆம் திகதிமுதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது இம்மாதம் 24ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

பரீட்சை முடிவில் முதல் 10 இடங்களைப் பெறுவோர்க்குப் பரிசில்களும் ஏ, பி, சி, டி, தரங்களில் சித்தியடைபவர்களுக்குச் சான்றிதழ்களும வழங்கப்படவுள்ளன.

(உ)

குரங்கு பாஞ்சான் குள முகாம் விவகாரம்

# தீர்வு காணப்படாவிட்டால் அரசுக்கு சிக்கல் நிலை உருவாகும்

## சகவாழ்வு நிறுவன தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய திருமலை குரங்கு பாஞ்சான் குள முகாம் விவகாரம் தொடர்பாக சுமுகமான தீர்வு எடுக்கப்படாவிடின் தெற்கில் அரசுக்கு இக்கட்டானதோர் அரசியல் குழப்ப நிலை உருவாகும்.

இவ்வாறு சகவாழ்வுக்கான நிறுவனத்தின் தலைவரும் மனித உரிமை வாதியுமான கலாநிதி குமார் ரூபசிங்க சமாதானச் செயற்பாடுகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் பின்னடைவு குறித்து அண்மையில் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குரங்கு பாஞ்சான் குளமுகாம் பிரச்சினை தீர்க்கப்படாவிடின் தெற்கில் அரசு பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய பாதகமானதோர் நிலை உருவாகும்.

அத்துடன், சமாதான முயற்சிகளுக்கான மக்களின் நம்பிக்கையும் ஆதரவும் கிடைக்காமல் போகக்கூடிய நிலையும் ஏற்படலாம். இதனால் சமாதானச் செயன்முறையில்பொது மக்களுக்கு நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் அரசும் விடுதலைப்புலிகளும் ஓர் இணக்கப்பாடான நிலைக்கு வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், சமாதானத்திற்கான செயற்பாடுகள் தொடர்பாக பாரிய சவால்களை அரசாங்கம் எதிர்கொண்டிருக்கும் நிலையில் அரசு தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம் பெறும் மாற்றங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் குறித்தும் அரசு பூரண கவனம் செலுத்தி மக்களுக்கு அதுபற்றி விளக்கமளிக்க வேண்டும்.

அத்துடன், பேச்சுவார்த்தைச் செயன்முறையின் வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு என்பவற்றையும் அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

நிரந்தர சமாதானத்திற்காகப் பல வழிகளிலும் சர்வதேச சமூகம் தமது உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்கிக் கொண்டிருக்கும் இந் நிலையில், தடையாகவுள்ள குரங்கு பாஞ்சான் குள முகாம் தொடர்பில் சுமுகமானதொரு தீர்வுகாணப்படவேண்டியது மிக அவசியமானது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (க-18)

## வருடாந்த மாநாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 52வது வருடாந்த மாநாடு இன்று குருநாகல் மாவட்டத்தில் உள்ள மாளிகாப்பிட்டிப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ''மாற்றத்திற்கு தயாராகுவோம்'' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது. (உ-10)

## தேர்தல் என்றதும் கட்சித் தாவல்கள் ஆரம்பம்




# யுத்த சூழலை அரசு வலிந்து உருவாக்கும்போது எமது பலத்தை உறுதி செய்வது அவசியம்

## யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன்

(ஏழாலை)

தொண்டுசெய்தல், விடுதலைக்கு உழைத்தல், தலைவரின் கரங்களைப் பலப்படுத்தல் ஆகிய இலட்சணங்களுடன் அமைந்தது தான் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கமம் கடந்த சனிக்கிழமை அளவெட்டி மகாஜன சபை நூல் நிலையக் கட்டடத்தில் தெல்லிப்பழை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே செம்மணன் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பொதுச் சுடரினை மாவீரரின் தந்தை வேலாயுதம் மற்றும் போராளிகளும் ஏற்றி வைத்தனர்.

துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழ் மக்களின் ஒட்டு மொத்த பலத்தினால் இன்றைய சமாதானச் சூழல் ஏற்பட்டு இருக்கின்றது. இந்தக்காலத்தில் நாம் 26 போராளிகளை இழந்து இருக்கின்றோம்.

எமது இனம் காலங்காலமாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறது. இது எமது தலைவருக்குத் தெரியும். இடைக்கால நிர்வாகம் என்பது சமாதானத்தின் நிரந்தரத் தீர்வாகாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு யுத்த சூழலை உருவாக்கி வருகின்றது. எனவே, நாம் பலமான நிலையில் இருக்க வேண்டும்.

உரிமையை இரண்டு வழிகளில் தான் பெறவேண்டும். ஒன்று பேச்சுவார்த்தை மூலம் மற்றையது யுத்தத்தின் மூலம். நாம் இதற்காகப் பல விட்டுக்கொடுப்புகளை செய்து வருகின்றோம்.

எமது உரிமைகளை நாமே பெற வேண்டும். நாம் பலமாக இருந்தால்தான் சமாதானத்தைப் பெறலாம். இன்றைய தலைமுறை ஏமாறுகின்ற நிலையில் இல்லை. எனவே, இன்றைய சூழலில் நாம் அனைவரும் விடுதலைக்காக உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் எஸ்.கனகலிங்கம், வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் பொ. வைரமுத்து, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சிறில், வலிகாமம் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் சாம்பசிவம் ஆகியோர் பேரவையின் திட்டங்கள் தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

மற்றும் வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வசந்தி, உடுவில்-தெல்லிப்பழை பிரதேச அரசியல்துறை இணைப்பாளர் ஜெனா, கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பேராளர்கள் இந்தச் சங்கமத்தில் கலந்து கொண்டனர். (உ-12)

இவ்வருடத்தின் 9 வது

# போலியோ தடைமருந்து வழங்கும் நிகழ்வு 20ஆம் திகதி

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் தேசிய போலியோ தடுப்பு மருந்துவழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

முதலாம் சுற்றில் 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இத்தடுப்பு மருந்தினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் செய்து வருகிறது.

ஐந்து வயதுக்குட்பட்ட சகல சிறுவர்களுக்கும் இத்தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளதால் சிறுவர்களது பெயர் விபரங்கள் பூரணமாகப் பெறப்பட்டுள்ளன.

மேலும், மருந்தேற்றும் நிலையங்களின் அமைவிடம், பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் மருந்து விநியோகம் தொடர்பான நடவடிக்கைகளை அப்பிரதேச வைத்திய அதிகாரி பணிமனை மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இவ் விஷேட மருந்து வழங்கும் நிகழ்வு இவ்வருடம் 9வது தடவையாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-252)

# இரகசிய கமரா பொருத்தப்பட்ட செலுலர் தொ.பே. பாவனைக்கு

(கொழும்பு)

இரகசிய கமரா பொருத்தப்பட்ட பல்லூடகத்துடன் இணைந்த செலுலர் தொலைபேசிகள் தற்போது இலங்கையிலும் புழக்கத்திற்கு வந்துள்ளன.

இது பலருக்கும் வேதனை அளிக்கும் விடயமாக அமைந்துள்ளது.

இளம் சமுதாயத்தினர் கடைத் தொகுதிகளிலும் கேளிக்கை விடுதிகளிலும் வைத்து இச் செலுலர் தொலைபேசிகளைத் தவறான முறைகளில் பயன்படுத்துவதாக தெரிய வந்துள்ளது.

இதன் மூலம் 10 அடி தூரத்தில் உள்ளவர்களை படம் பிடித்துக் கொள்ள முடியும். படம் பிடிக்கப்பட்ட பின்னர் கணனியினூடாக உருப பெருக்கப்பட்டு படம் பெறப்படுகின்றது. படம் எடுக்கப்படுபவருக்கு எது விதமான சமிக்ஞைகளையும் இது காட்டாது. படம் எடுப்பதற்கு பட்டனை அழுத்தவோ, தொலைபேசி எண்களை டயல் செய்யவோ தேவையில்லை. செலுலர் தொலைபேசியினூடாக படங்களை பரிமாற்றம் செய்வதற்கு இதனை அறிமுகப்படுத்திய நிறுவனம் மாதத்திற்கு 50 ரூபாவை அறிவிடுகின்றது.

அதைவிட, அழைப்பை ஏற்படுத்துவதற்கு 2ரூபா அறிவிடப்படுகின்றது.

இவ்வாறான தொலைபேசிகள் தற்போது சந்தையில் 35ஆயிரம் ரூபா வரை விற்பனை ஆகின்றன.

இரகசியமாக இதன் மூலம் எடுக்கப்பட்ட படங்கள் பல பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளன.

சமீபத்தில் இத்தகையதொரு கமராவினை பொ.ஐ.மு. எம்.பி. ஒருவர் பாவித்து பாராளுமன்றத்தில நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றை படம் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# வட-கிழக்கு பாடசாலைகளுக்கிடையிலான கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகளுக்கிடையே மாகாணக் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டிற்கான கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு;

பாலர்கீழ்ப்பிரிவு (தரம்3,4)

1ஆம்இடம:- வவுனியா தெற்கு நெளுக்குளம் கலைமகள் ம.வி. (தளிர்கள்)

2ஆம்இடம:- துணுக்காய் அம்பகாமம் அ.த.க. பாடசாலை (பூந்துணர்)

3ஆம்இடம:-மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்(மலரும்மொட்டுககள்)

பாலர் மேற்பிரிவு (தரம்-5)

1ஆம் இடம்:- சம்மாந்துறை அல்முனீர் வித்தியாலயம் (உதயம்)

2 ஆம் இடம் :- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (மலரும் செல்வங்கள்)

3ஆம்இடம:-கிளிநொச்சி பல்லவராயன் கட்டு இதக. பாடசாலை(ஆரம்)

இடை நிலைப்பிரிவு–1 (தரம்6,7)

1ஆம்இடம:-மட்டக்களப்பு அமிர்தகழி சித்தி விநாயகர் வித்தியாலயம் (வளர்நிலா)

2ஆம்இடம்:- முல்லைத்தீவு விசுவமடு பாரதி வித்தியாலயம் (துலங்கல்)

3ஆம்இடம்:- மருதமுன்ன அல் ஹம்ரா வித்தியாலயம் (வளரும் உள்ளங்கள்)

இடைநிலைப்பிரிவு–2 (தரம் 8,9)

1ஆம்இடம:-மன்னார் வங்காலை புனித ஆனாள் ம.ம.வி.(விழுதுகள்)

2ஆம்இடம:- திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி (அநந்தம்)

3ஆம்இடம:- கல்முனை பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி (வானவில்)

இடைநிலைப்பிரிவு–3(தரம் 10,11)

1ஆம்இடம:- மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி ம.வி.(திறவுகோல)

2ஆம்இடம:- முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி (பருவம்)

3ஆம் இடம :- கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை(கீற்று)

கல்லூரி நிலைப்பிரிவு(தரம் 12,13)

1ஆம்இடம:- பட்டிருப்பு களுவாஞ்சிக்குடி ம.ம.வி.(ஊக்கி)

2ஆம்இடம:- கிளிநொச்சி வட்டக்கச்சி ம.வி. (கடல்)

3ஆம்இடம:- வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி(நறுமுகை)

இப்பாடசாலைகளுக்குரிய பரிசில்களும் சான்றிதழ்களும் இம்மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாணத் தமிழ் இலக்கியப் பெருவிழா நிகழ்வின்போது வழங்கப்படவுள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.ஆனந்தராஜ் தெரிவித்துள்ளார். (உ-8)

இந்தியாவில் உள்ள

# இலங்கை மீனவரின் படகுகளை மீட்பதில் மீண்டும் தாமதம்

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள இலங்கைக கடற்றொழிலாளர்களின் படகுகளை மீட்கும் நடவடிக்கையில், மீண்டும் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்களின் விளைவாக பெருமளவு தமிழ்மக்கள் 65மீன்பிடிப் படகுகள் மூலம் இந்தியா சென்ற சமயம் இந்திய சுங்க அதிகாரிகளால் 65 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டதுடன், அப்படகுகளில் வந்தவர்கள் தடுப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையினையடுத்து மேற்படி முகாம்களில் தடுத்துவைககப்பட்டவர்கள் நாடு திரும்பிய போதும் அவர்களை ஏற்றிச் சென்ற 65 மீன்பிடிப் படகுகள் மீனவர்களிடம் கையளிக்கப்பட வில்லை.

இந்நிலையில் திருகோணமலை மாவட்ட படகுகள் உரிமையாளர் சங்கத் தலைவர் படகுகளை மீட்கும் பொருட்டு கடந்த மாதம் தமிழகம் சென்றிருந்தார்.

ஆயினும், படகுகளை மீட்கும் நடவடிக்கைகள் மீண்டும் தாமதம் அடைந்ததாகவும், இதனால் மீனவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

## இன்று ஒரு தகவல்

# தொலைக்காட்சி

ஒரு நண்பர் என்னைத் தேடி வந்தார். அவருக்கு ஏற்கனவே ''தண்ணி போடும்'' பழக்கம் உண்டு. மதுப்பழக்கம் உடல் நலத்துக்கு மிகவும் கெடுதல் செய்யும் என்பதை அனுபவத்தில் புரிந்து கொண்டார். அதற்கப்புறம் அந்தப் பழக்கத்தை விட்டு விட்டார். இப்போது அவர் நிதானமான ஆள். அப்படி இருந்தும் அவசரமாக ஓடி வந்தார். ''என்ன விஷயம்? என்று கேட்டேன். அதற்கு அவர் சார்! எங்கள் வீட்டு ரீ.வியில் படம் இரண்டிரண்டாகத் தெரிகின்றது சார்'' என்றார்.

நானும் சிறிது நிதானமாகவே அவரிடம் விசாரித்தேன். '' ஏன் சார்? தொலைக்காட்சிப் பெட்டியே இரண்டிரண்டாகத் தெரிகின்றதா?'' என்றேன். ''இல்லை! உருவம் தான் இரண்டாகத் தெரிகின்றது'' என்றார்.

அப்படி என்றால் நிச்சயமாக இவரிடம் குறை இல்லை என்று முடிவு செய்தேன். உடனே புறப்பட்டுச் சென்று பார்த்தேன். எனது கண்ணுக்கும் உருவம் இரட்டையாகத்தான் தெரிந்தது. அதற்குப்பின் நாங்கள் இருவரும் இன்னொரு சிநேகிதர் வீட்டிற்குச் சென்றோம். அவர் ஒரு தொழில் நுட்ப வல்லுநர். அவரிடம் விடயத்தைக் கூறினோம்.

அன்ரனாவில் ஏதோ குறை என்று அங்கிருந்தே கண்டு பிடித்து விட்டார் அவர். அவரை அழைத்துக்கொண்டு வந்து காட்டினோம். ''உயரமான சுவருக்குப் பக்கத்தில் தொலைக்காட்சி இருக்கின்றது. அதனால் தான் படம் அப்படித் தெரிகின்றது'' என்றார். அதைச் சிறிது இடம்மாற்றி வைத்தார். இப்போது படம் நன்றாகத் தெரிந்தது. எங்கள் இருவரது கண்ணுக்கும் சேர்ந்து ஒரு படம் தான் தெரிந்தது.

உயரமான சுவற்றின் அருகேயோ அல்லது மேநிலை தண்ணீர்த் தொட்டிக்கு அருகிலோ அல்லது உயரமான மரத்துக்குப் பக்கத்திலோ அன்ரனா இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் படம் இரட்டையாகத்தான் தெரியும்.

அதிகப்பணம் செலவழித்து தொலைக்காட்சி வாங்குகின்றோம். அதை எப்படிப் பராமரிப்பது என்று சிறிது தெரிந்து வைத்திருபபது நல்லது தானே. முதலில் உங்களது தொலைக்காட்சியை சுவற்றுக்குப் பக்கத்திலோ, அலுமாரிக்குப் பக்கத்திலோ மிக நெருக்கமாக ஒட்டிவைக்கக்கூடாது. குறைந்த பட்சம் அரை அடி இடைவெளி தூரமாவது இருக்க வேண்டும். இது எதற்கு நீங்கள் போய் வரவா? இல்லை! காற்றுப் போய் வருவதற்காக. காற்றோட்டம் தாராளமாக இருக்க வேண்டும். அப்போது தான் தொலைக்காட்சி சூடேறாமல் இருக்கும். தொலைக்காட்சியின் பின்புறத்தில் காற்றோட்டம் தாராளமாக இருக்கவேண்டும். இது மிக முக்கியம்!

பலபேர் தொலைக்காட்சி மீது உறை போட்டு மூடி வைத்திருப்பார்கள். தொலைக்காட்சியை நிறுத்தியவுடன் அந்த உறையினால் மூடி விடக்கூடாது. சூடு ஆறுவதற்குப் போதிய அவகாசம் இருக்க வேண்டும். அரை மணி நேரத்திற்குப் பின் உறையை மாட்டலாம். நடைமுறையில் யாரும் இப்படிச் செய்வதில்லை. ஏனென்றால் போட்ட உறையை யாரும் கழற்றுவதே இல்லை. எப்படி இருந்தாலும் சரி. தொலைக்காட்சிப் பெட்டியில் சூடு தங்காமல் பார்த்துக்கெள்ள வேண்டும்.

தொலைக்காட்சி மீது சூரிய வெளிச்சம் படாத இடமாகப் பார்த்து வைக்க வேண்டும். வெய்யில் படாது இருக்க வேண்டும் என்றால் ஈரம் படலாம் என்று அர்த்தம் இல்லை. ஈரப்பசையும் அங்கே இருக்கக்கூடாது. சிலர் பூச்செடி தொட்டிகளை தொலைக்காட்சிப் பெட்டியின் மேலேயோ பக்கத்திலேயோ வைத்திருப்பார்கள். மிகுந்த கலை உணர்ச்சி. செடி வாடினால் தண்ணீர் ஊற்றுவதாகக் கூறிக்கொண்டு போய் நிற்பார்கள். தொலைக்காட்சிப்பெட்டிக்கும் சேர்த்து அபிஷேகம் நடக்கும் இது மிகவும் தவறு.

நிகழ்ச்சி பார்த்து முடிந்தவுடன் தொலைக்காட்சியின் சுவிட்சை நிறுத்த வேண்டும். அதற்குப்பிறகு புளொக் பொயின்ரில் உள்ள சுவிட்சையும் நிறுத்தி விட வேண்டும். அதேபோல் தொலைக்காட்சியைப் போடும் போதும் முதலில் புளொக் பொயின்ரில் உள்ள சுவிட்ச். பின்பு தொலைக்காட்சி சுவிட்ச்.

தொலைக்காட்சியைக் கவனிப்பது போல் உங்கள் கண்ணையும் கவனித்துக்கொள்ள வேண்டும். உற்றுப் பார்ககக்கூடாது. வெளிச்சம் இல்லாத இடத்தில் இருந்து தொலைக்காட்சி பார்ப்பது கண்ணுக்குக்கெடுதல். உங்களுக்குப் பின்னால் 40 வோட்ஸ் அல்லது 60 வோட்ஸ் லைற் எரிய வைத்து விட்டுப் பாருங்கள். அது தான் நல்லது. கண் நன்றாக இருந்தால் தான் காட்சியை இரசிக்க முடியும். அதனால் முதலில் கண்ணைக் கவனித்துக்கொள்ளுங்கள்.

இவையெல்லாம் பலருக்குத் தெரிந்த விடயம் தான் இருந்தாலும் நினைவூட்டுவதில் ஒன்றும் தவறில்லை. ''எனது க்ணவர் எப்போதும் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருக்கிறார்'' என்று டாக்டரிடம் வந்து கூறினார் ஒரு பெண் மணி. ''அதில் என்ன தப்பு ?'' என்று கேட்டார் டாக்டர். ''மின்சாரம் நின்று விட்டால் கூட மெழுகுதிரியைக் கொழுத்தி வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாரே! அது தான் சந்தேகமா இருக்கின்றது?'' என்றார் அந்தப் பெண்மணி! இதற்கு அன்ரனாவை சரி செய்து பிரயோசனம் இல்லை. அவரையே சரி செய்ய வேண்டும்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# உலக ஆசிரியர் தினத்தன்று மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம்

(உடுவில்)

உலக ஆசிரியர் தினமான ஒக்டோபர் 6 ஆம் திகதியைப் பகிஷ்கரித்து, அத்தினத்தில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றினை நடாத்துவதற்கான முஸ்தீபுகளில் தாம் இறங்கியிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாண பொதுச் செயலாளர் அ. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரிய சேவையில் இன்னும் பல குறைபாடுகளும் இடர்ப்பாடுகளும் காணப்படும்போது ஆசிரியர் தினத்தை கொண்டாடுவதால் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

எனவே, அத்தினத்தில் எமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பழைய பாராளுமன்றம் வரை அமைதியான முறையில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

எம்முடைய இந்தப் பேரணியில் இணைவதற்கு தென்னிலங்கையிலுள்ள 16 தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று கூறினார்.

இதேவேளை, தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி, வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் வடக்கு-கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பேரிணையமும் இப் போராட்டத்தில் இணைந்து கொளவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது என்று தெரியவருகிறது. (உ-261)

## வட-கிழக்கு பிரிப்பு பற்றி இந்தியாவுக்கு அனுப்பிய

# சிஹல உறுமயவின் கடிதத்திற்கு அ.இ.த.கா. பலத்த கண்டனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் விடயத்தில் இந்தியா ஒருபோதும் தலையிடக்கூடாது என சிஹல உறுமய இந்தியாவிற்கு கடிதம் எழுதியிருப்பது குறிதது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தனது வன்மையான கண்டனத்தை வெயியிட்டுள்ளது.

அக்கட்சியின சிரேஷ்ட உப தலைவரான நல்லையா குமரகுருபரன் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

சிஹல உறுமயவின் இந்நடவடிக்கை சுயநல அரசியலை நோக்காகக் கொண்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுத்தால், அதனைத் தடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவிற்கு உள்ளது.

அத்துடன், வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்று இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இந்திய அரசினால் ஏற்கனவே ஆமோதிக்கப்பட்டமையினால் இந்தியா இது விடயத்தில் மிக நிதானமாகச் செயற்பட வேண்டும் என்றுள்ளார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தை தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்க ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா தலையிடக்கூடாது என்றும்,

ஏனெனில், இலங்கையில் தனித் தமிழீழம் ஒன்று அமையுமானால் பெரும் அழிவு ஏற்படுவதுடன், அது இந்தியாவின் நிலையான தன்மையையும் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டு சிஹல உறுமயக் கட்சித் தலைவர் திலக் கருணாரட்ண, இந்திய வெளியுறவு அமைச்சர் நிருபம் சென்னிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இராசி பலன்

**02.09. 2003**

**(ஆவணி,16,செவ்வாய்)**

**சஷ்டி - ந.ப. 12.12 வரை**

**விசாகம் - மு.இ. 10.40 வரை**

**இராகுகாலம் - 3.05-4.35**

**சுபநேரம் - 10.35-12.05**

**மேடம்**
தொழில் கஷ்டம், வீண் பகை, முயற்சி தாமதம், திடீர் நன்மை,

**இடபம்**
எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை, மனோ தைரியம், சயன சுகம்,

**மிதுனம்**
சிநேகிதரால் நன்மை, பிரயாண சுகம், செய்தொழில் முன்னேற்றம், போசன சுகம்

**கடகம்**
காரிய இடையூறு அஜீரண ரோகம், பணத்தட்டுப்பாடு, குடும்பக் கவலை,

**சிங்கம்**
தன்னம்பிக்கைக் குறைவு, பண விரயம், மாதா சுகம், முயற்சி தாமதம்,

**கன்னி**
மனோ தைரியம், நற்கீர்த்தி, கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை

**துலாம்**
அதிக செலவு, மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, முயற்சி தாமதம்

**விருச்சிகம்**
வெகுமானம், விருந்துபசாரம், நல்ல மரியாதை, காரிய சித்தி,

**தனுசு**
கோபப்படுதல், சோம்பல் நிலை, கீழ்ப் படிதல், முயற்சி தாமதம்

**மகரம்**
சிநேகிதர் வரவு, குடும்ப சுகம், காரிய தாமதம், தனதானிய சேர்க்கை

**கும்பம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி, அதிக பிரயாசை, சுப நிகழ்வு

**மீனம்**
உத்தியோக பங்கம், தேகாந்திர வாசம், சரீரப் பிரயாசை, முயற்சி தாமதம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# அரசு இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் கையளிக்கவேண்டும்

## அ.இ.காங்கிரஸ் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாகத்தை எவ்வித தாமதமுமின்றி அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்க வேண்டும். அதன் மூலம் தமிழ்ப் பிரதேசத்தின் நிர்வாகப் பணிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் முனைப்புடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அதிகாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கூடிய அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பொதுச் சபைக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

காங்கிரஸ்கட்சியின் தலைவரும், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமனற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மேலும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

கிழக்கு மாகாணத்தில் 550 பொலிஸ கான்ஸ்டபிள்களைத் திரட்டும் முயற்சியை அரசாங்கம் உடனடியாகக் கைவிடவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதை பாராளுமன்றத்திலுள்ள சகல தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் எவ்விதமான கட்சி பிரதேச வேறுபாடுகளும் அற்ற நிலையில் எதிர்க்கவேண்டும்.

கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சீ.வீ.கே.சிவஞானத்தினால் முன்வைக்கப்பட்ட மேற்படி மூன்று தீர்மானங்களையும் பொதுச் சபை உறுப்பினர்கள் ஏகமனதாக அங்கீகரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-16-04)

# இருளில் மூழ்கியுள்ள வலி.வடக்கு வீதிகள்

(ஏழாலை)

காங்கேசன்துறை பிரதான வீதியில் தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகள் பல பழுதடைந்து ஒளிராத நிலையில் இருப்பதால் இரவுநேரப்போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்பொழுது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருவதனால், இரவுநேரப் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனினும், வீதியில்போதிய வெளிச்சம் இல்லாமையினால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணபபடுவதுடன், திருடர்களுக்கும் சாதகமான நிலை உருவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-12)

# இலங்கைத்தமிழர் பிரச்சினைத் தீர்வில் புலம்பெயர் தமிழரின் அக்கறை அவசியம்

## ம.மக்கள் முன்னணி தலைவர் நோர்வேயில் கருத்து

(கொழும்பு)

இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வல் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் பங்களிப்பு அத்தியாவசியமானது என்பதனை மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் நோர்வேயில் வலியுறுத்தியுள்ளார்.

நோர்வேயில் தற்போது தங்கியுள்ள அமைச்சர் சந்திரசேகரன் அங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை சந்தித்து உரையாடும் போது இவ்வாறு தெரிவித்தார்.

உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஈழத்தமிழர்களின் பிரச்சினையை தமிழீழ விடுதலைப் புலிகள மாத்திரமே கவனித்துக் கொள்வார்கள் என்று அலட்சியமாக இருந்துவிடாமல்-தமிழர் பிரச்சினை தீர்வில் தமக்குள்ள சமூகக் கடமையை உணர்ந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் வழி காட்டிகளாக இயங்க வேண்டுமென்று அமைச்சர் வேண்டுகோள்விடுத்தார்.

(க)

ஒலித்தக் கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.
—குறள்

# வலம்புரி

## பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தல்

முப்படைகளையும் தயார் நிலையில் இருக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவுறுத்தியுள்ளார். தனது இவ்வறிவித்தலை திருகோணமலை கடற்படைத் தளத்தில் பயிற்சி முடித்து வெளியேறிய கடற்படையினரின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது விடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் வேளையில் முப்படைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்ற பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தல் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை நாட்டைப் பொறுத்தவரை எல்லை தாண்டிய யுத்த அபாயம் எதுவும் இந் நாட்டிற்கு இல்லை. உள் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தை மையமாக வைத்தே ஆயுதக் கொள்வனவு, முப்படைக்கான ஆட்சேர்ப்பு ஆகிய கருமங்களில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. எனினும் தற்போது அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், உள்நாட்டு யுத்தத்திற்கும் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இத்தகையதோர் சூழ்நிலையில் முப்படைகளையும் தயாராக இருக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன விடுத்த திடீர் அறிவிப்பு கடற்படையினர் மத்தியில் ஏதாவது பேச வேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டதா? என்ற வினாவை ஏற்படுத்தியிருப்பினும், பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருப்பார் என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வகையில், முப்படைகளையும் தயார் நிலையில் இருக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் விடுத்த அறிவுறுத்தல் சமாதானக் கப்பலில் துவாரம் ஏற்பட்டுள்ள ஆபத்தை வெளிக்காட்டியுள்ளது.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சர் ஆற்றிய உரையில சமாதான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற மன உணர்வில் படையினர் சோர்மானம் அடைந்து விடக்கூடாது எந்நேரமும் எதுவும் நடக்கலாம்.ஆகையால் முப்படைகளும் தயாராக இருக்க வேண்டும் என்றும் கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பாதுகாப்பு அமைச்சரின் முன்னெச்சரிக்கை நாட்டில் மீண்டுமோர் ஆபத்து ஏற்படவுள்ளதை சுட்டி நிற்கிறது.

இடைக்கால சபையைக் கோரி நிற்கும் விடுதலைப் புலிகள் அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால சபைக்கான திட்டவரைபில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய திட்ட வரைபைத் தயாரித்துள்ளனர். இவ்வாறு விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைபை அரசிடம் சமர்ப்பிப்பதற்கான காலம் நெருங்கிவரும் வேளையில். பாதுகாப்பு அமைச்சர் முப்படைகளையும் தயாராக இருக்குமாறு கூறியிருப்பது, இடைக்கால சபை பற்றிய ஓர் முடிவை அரசு எடுத்து வைத்துள்ளதென்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

---

## மருத்துவ விளக்கம்

# ஆபத்தான வேளையில் அவசியமானதாக அமைந்து உயிர்காக்கும் முதலுதவி

**இரா. சு. முத்து, எம்.ஏ**

### மின் அதிர்ச்சி

மின் தாக்குதலுக்கு ஆளான ஒருவரைக் காப்பாற்றச் செல்லும் பொழுது முதலுதவி செய்பவர் தன்னைத் தற்காத்துக்கொள்ள வேண்டும். வட்டினுள் நிகழ்ந்தால் பிளக்கை எடுத்துவிடுங்கள். மெயின் ஸ்விட்சை செயல்பாடு இல்லாமல் செய்துவிடுங்கள். வீட்டிற்கு வெளியே என்றால் உலோகம் சம்பந்தப்பட்ட கமபு, கழி போன்றவற்றைப் பயன்படுத்தி அவர் உடலை அப்புறப்படுத்துங்கள்.

**முதலுதவி:**

* அவர் சுவாசத்தையும், நாடித் துடிப்பையும் பரிசோதியுங்கள்.
* தேவையென்றால் செயற்கை முறை சுவாசம் கொடுங்கள். இதயத்தையும், சுவாசப்பையையும் சிகிச்சை செய்து இயங்கவையுங்கள்.
* மின்தாக்குதலினால் உடலில் கொப்புளம், காயம் உண்டாயிற்றென்றால் அந்த இடத்தைக் குளிர்ந்த் நீரால் நன்கு கழுவி சுத்தமான துணியால் கட்டுப்போடுங்கள்.
* உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவும்.

### காக்கை வலிப்பு-இழுப்பு

நரம்பியல் கோளாறு காரணமாகக் கணப்பொழுது ஒருவர் உணர்விழத்தல், அவரது உடலில் ஒரு பக்கமாகவெடடி வெட்டி இழுத்தல் போன்றவை உண்டானால், அதற்குக் காக்கை வலிப்பு என்று பெயராகும். இது ஆண், பெண் இருபாலார்க்கும் எல்லா வயதினர்க்கும்வரும் என்றாலும், குறிப்பாக 2வயது முதல 14வயதுவரை உள்ளவர்களுக்கு அதிகமாக வருகிறது.

**முதலுதவி:**

* ஒரு பக்கமாக வலிப்புவந்தால் அந்த மனிதரை முதலில் நேராக நிமிர்த்துங்கள்.
* அவர் அருகிலுள்ள மேஜை, நாற்காலி போன்ற பொருட்களை அப்புறப்படுத்துங்கள்.
* அவர் வாயில் எந்தவொரு பொருளையும் பலவந்தமாகத் திணிக்காதீர்கள்.
* அவரது வலிப்பை பலவந்தமாக நிறுத்தாதீர்கள.
* சில நிமிடங்களில் வலிப்பு தானாக நின்றுவிடும்.
* வலிப்பு நின்றவுடன் அவரை ஒருக்களித்துப்படுக்க வையுங்கள். அவருக்கு முற்றிலும் சரியாகும்வரை அவர் அருகில் இருங்கள்.
* அவா உடலில் அடிபட்ட காயங்கள் ஏதேனும் இருக்கின்றவா, என்று பார்க்கவும். அவரால் எழுந்து நடக்க முடியுமென்றால், அவரைப் பத்திரமாக அவர் வீட்டில் சேர்க்கவும். முதன்முதலாக அவருக்கு வலிப்பு வந்ததென்றால், மருத்துவரைத் தொடர்புகொள்ளவும்.

8, 15 நிமிடங்களுக்குள் அவருக்கு வலிப்பு நிற்கவில்லையென்றால், உடனே மருத்துவமனையில் சேர்க்கவும்.

வலிப்பு நோய் உள்ளவர்கள் மது குடிக்கக்கூடாது. இரண்டு வருடங்களுக்கு வலிப்பு வரவில்லை யென்றால் மட்டுமே கார் போன்ற வாகனங்கள் ஓட்டலாம்.

### மயக்கம்

மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு தற்காலிமாகக் குறையும் பொழுது, ஒருவர் முற்றிலும் உணாவிழந்து மயக்கமடைந்து விடுகிறார். இதற்கு மிக அதிகமாக உணர்ச்சிவசப்படுதல், பயப்படுதல், வேதனைப்படுதல், அதிர்ச்சியடைதல் போன்றவை காரணமாகும்.

**முதலுதவி:**

* மயக்கமடைந்தவரை நேராகப் படுக்க வையுங்கள். அவர் கால்கள் இரண்டையும் தூக்கி உயரமான இடத்தில் வையுங்கள்.
* ஜன்னல், கதவு முதலியவற்றை திறந்துவைத்து சுத்தமான காற்று அறையினுள் வர ஏற்பாடு செய்யுங்கள்.
* மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டாரென்றால், அவரை ஆசுவாசப் படுத்துங்கள். அவர் கால்முட்டிகளுக கிடையில் தலையை வைத்து சிறிது நேரம் உட்காரச்செய்யுங்கள்.
* நீண்ட நேரமாக மயக்கம் தெளியவில்லையென்றால், அவரது சுவாசத்தையும், நாடித்துடிப்பையும் பரிசோதியுங்கள். அவரை ஒருக்களித்துப் படுக்க வையுங்கள்.
* அவசியமென்றால், செயற்கை முறை சுவாசம் கொடுக்கத் தயாராகுங்கள்.



### காய்ச்சலினால் வரும் இழுப்பு

இரண்டு வயதிற்குக் கீழேயுள்ள குழந்தைகளுக்கு சிலசமயம் கடுமையான காயச்சல் காரணமாக இழுப்பு வரும். பொதுவாகக் குழந்தைகளுக்குத் தொண்டையில் நோய்க்கிருமிகள் பற்றிக்கொள்வதின் காரணமாக காய்ச்சல வரும். அப்போது குழந்தை மீது நன்றாகத் துணியைப் போட்டுப் போர்த்திவைப்பதின் மூலம் அதன் உடல் உஷ்ணம் முன்னைக் காட்டிலும் அதிகரிக்கும். அப்போது குழந்தையின் கை, கால்கள் வெட்டி வெட்டி இழுக்கும். கண்கள் மேல்நோக்கிச் செருகும். சுவாசம்கூட சிலநேரம் நின்றுபோகும். எனவே, முதலுதவி செய்பவரின் நோக்கம் குழந்தையின் காய்ச்சலைக் குறைப்பதாக இருத்தல் வேண்டும்.

**முதலுதவி:**

* குழந்தையின்மீது போர்த்தப்படடிருக்கும் போர்வையை நீக்குங்கள். ஆடையை அகற்றுங்கள.
* வெது வெதுப்பான நீரில் துணியை நனைத்துக் குழந்தையின் தலை முதல் பாதம்வரை துடைக்கவும்.
* குழந்தயை ஒருக்களித்துப் படுக்க வைப்பதின் மூலம் அதன் சுவாசப் பாதை அதன் நாக்கினால் அடைத்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
* மென்மையான தலையணைகளைக் குழந்தையின் இருபுறமும் அனைத்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் இழுப்பு வந்தாலும் அதன் உடலில் காயம் படாமல் இருக்கும்.
* உடனடியாக மருத்துவரை வரச் செய்யவும்.

### அந்நியப் பொருட்கள்

காயங்களின் உட்புறமோ அல்லது செவி, மூக்கு, வாய், கண், போன்றவற்றின் துவாரங்களின் மூலமோ ஏதேனும் பொருள் உள்ளே சென்று விட்டால் அதை "அந்நியப் பொருள்" என்று குறிப்பிடுகின்றனர். உடலினுள் புகுந்து விடட அந்நியப் பொருளை எடுப்பது உகந்ததுதானா என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ளுங்கள். காரணம் சில பொருட்களை அவ்வாறு எடுக்கக்கூடாது. அப்போது மருத்துவ உதவியை நாடுங்கள்.

### மூக்கினுள் அந்நியப் பொருள்

பொதுவாகக் குழந்தைகள் அந்நியப் பொருட்களை எடுத்து மூக்கினுள் திணித்துக்கொள்ளும். மூக்கினுள் அந்நியப்பொருள் போய்விட்டால் உடனே மருத்துவ உதவி நாடுங்கள். நீங்களாக எடுக்கமுயன்றால், குறிப்பாக அப்பொருள் கூர்மையானதாக இருந்தததென்றால், மூக்கிலுள்ள திசுக்களுக்குப் பாதிப்பு உண்டாகும்.

**அடையாளங்கள்:**

* மூக்கினுள் அந்நியப்பொருள் சென்றுவிட்டால் பாதிக்கப்பட்டவர் மூக்கின்வழியே சுவாசிக்கச் சிரமப்படுவார்.
* நாசித் துவாரங்களின் வழியே இரத்தம் அல்லது சளிவரும்
* மூக்கு வீங்கிவிடும்.

**முதலுதவி:**

* பாதிக்கப்பட்டவரை வாயின் வழியே சுவாசிக்கச் சொல்லுங்கள்
* அவரை அமைதிப்படுத்துங்கள். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லுங்கள்.

**காதினுள் அந்நியப் பொருள்:**

மூக்கினுள் திணித்துக் கொள்வதைப்போல சிறு குழந்தைகள் காதினுள்ளும் ஏதாவது அந்நியப் பொருளை எடுத்துத் திணித்துக் கொள்ளும். சில சமயம் காதைச் சுத்தம் செய்யும்பொழுது, பஞ்சுத் துணுக்குகள் காதினுள் சென்று விடலாம் அல்லது படுத்திருக்கும் பொழுது சிறு பூச்சி, புழுக்கள் காதினுள் சென்றுவிடலாம். இயறைவரையில் காதினுள் சென்றுவிட்ட பொருளை நீங்கள் எடுக்க முயற்சி செய்யாதீர்கள். அம்முயற்சியில் மென்மையான செவிப்பறை கிழிந்துவிடலாம். அதனால் மருத்துவ உதவியை உடனே நாடவும்.

**அறி குறிகள மற்றும் அடையாளங்கள்:**

* பாதிக்கப்பட்டவர், எந்தக் காதினுள் அந்நியப்பொருள் புகுந்துவிட்டதோ அந்தக் காது கேட்கவில்லை என்று கூறுவார்.
* அந்தக் காதில் வலி, வேதனை இருப்பதாகக் கூறுவார்.

**முதலுதவி:**

* அவரைக் கீழே அமரச்செய்யுங்கள்.
* இளஞ்சூடான வெந்நீரை அவர் காதினுள் ஊற்றுங்கள. பூச்சி ஏதேனும் காதினுள் இருந்தால் வெளியே வந்துவிடும்
* வேறு ஏதேனும் கூர்மையான பொருள் அடைத்துக்கொண்டிருந்தால் உடனே மருத்துவ மனைக்குக கொண்டுசெல்லுங்கள்.

### கண்ணில் அந்நியப்பொருள்

கண்ணிலுள்ள வெண்மைப் பகுதியில் தூசு, மண், துகள்கள், கண் மடல் ரோமங்கள் விழுந்து விட்டதென்றால் கண்ணில் அழுத் தமும், எரிச்சலும் உண்டாகும். ஆனால் இவற்றை எளிதாக எடுத்துவிடலாம். அதேசமயம் கண்ணின் கருவிழியில் அல்லது உட்புறத்தில் ஏதேனும் விழுந்து விட்டதென்றால், அதை நீங்கள் எடுக்க முயற்சி செய்யக்கூடாது. உடனே மருத்துவரின் உதவியை நாடவேண்டும்.

**அறி குறிகள் மற்றும் அடையாளங்கள்**

* கண்ணை ஏதோ அழுத்துகிறது என்பார். பாதிக்கப்பட்ட கண்ணைக் கைகளால் கசக்குவார்.
* பாதிக்கப்பட்ட கண் சிவந்து, எரிச்சல் இருக்கும். கண்ணிலிருந்து நீர் வழிந்துகொண்டே இருக்கும். பாதிக்கப்பட்ட கண் மங்கலாகத் தெரிகிறது என்பார்.

**முதலுதவி**

* அவரை அமைதிப்படுத்துங்கள். கண்ணைக் கசக்கக்கூடாது என்று கூறுங்கள்
* ஒரு நாற்காலியில் அமரச்செய்து, தலையைப் பின்புறம் சாய்த்துக் கொள்ளச் சொல்லுங்கள்
* அவரது தாடயை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் அவரது கண்ணின் மேல், கீழ் இமைகளை நன்கு விரித்து, அவரது கண்ணை மேலும், கீழும், இடமும் வலமும் அசைக்கச் சொல்லுங்கள். அப்போது கண்ணை உங்களால் நன்கு பரிசோதிக்க முடியும்
* எந்தக் கண்ணில் தூசு விழுந்துள்ளதோ அந்தப்பக்கத் தோள மீது ஒரு துண்டைப்போட்டு கண் இமையை சிறிது விரித்துக் கண்ணில் சுத்தமான தண்ணீரை விடுங்கள். தண்ணீரின் மூலம் தூசு வெளியே வந்துவிடும்.
* அல்லது சுத்தமான துணியை தண்ணீரில் நனைத்து அதன் ஓரத்தைப் பயன்படுத்தி தூசியை எடுங்கள்.
* கண்ணின் கருமணியில் தூசு இருந்ததென்றால் மேலே கூறியுள்ள அனைத்து முறைகளையும் பயன் படுத்திய பிறகு மருத்துவரிடம் அழைத்துச்செல்லுங்கள்.
* பாதிக்கப்பட்ட கண்ணை சுத்தமான துணியால் கட்டி மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லுங்கள்.

### வாயினுள் அந்நியப் பொருள்

பொதுவாக சிறு குழந்தைகள் நாணயம், பட்டின், ஊசி போன்றவற்றை வாயில் போட்டு விழுங்கி விடும். கூர்மையானபொருள் என்றால் உணவுக்குழாய்க்கு சேதம் விளைவித்து விடும். பட்டின் போன்ற மென்மையானபொருள் சுவாசக் குழாயினுள் சென்றுவிட்டால் மூச்சுத் திணறல் உண்டாகும். விழுங்கப்பட்ட பொருள் என்னவென்ற கண்டு பிடிக்க முயலுங்கள். குழந்தையை வாந்தி எடுக்கவைத்து விழுங்கிய பொருளை வெளியே கொண்டுவர முயற்சி செய்யாதீர்கள். எதையும் வாயினால் உட்கொள்ளச் செய்யாதீகள். குழந்தையை உடனே மருத்மனைக்கு கொண்டுசெல்லுங்கள்.□

---

## ௐ தினசரி தியானம்

### படைப்பின் அற்புதம்

அந்தமில்லா ஆண்டவனை நிரூபித்துக்காட்ட முடியாது. ஏனெனில் அவர் ஓர் எல்லைக்குள் அடங்கும் அறிவு. மனம் விவேகம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவர். ஆனால் அவர் இருக்கிறார் என்பதைச் சில அனுபவங்கள் வாயிலாக அறியலாம். கல்லினுள் தேரைக்கு உணவளிப்பவர் யார்? பருவ காலங்களை ஏற்படுத்தியவர் யார்? யாருடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு சூரியன் காலையில் குறிப்பிட்ட நேரத்தில் உதிக்கிறான்? எல்லா நட்சத்திரங்களும் கிரகங்களும் குறிப்பிட்ட சட்டங்களுக்கு உட்பட்டுச் சுழன்று வரும் படியாகச் செய்தவர் யார்? அவர் தாம் ஆண்டவன்.

சுவாமி சிவானந்தர்

# இடைக்கால சபையை வழங்காவிடில் தனியரசை வழங்க வேண்டி வரும்

## சுவிஸ் கல்விச்சேவைப் பொறுப்பாளர் உரை

(திருநெல்வேலி)

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண முன்வந்திருக்கும் அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கத் தயங்குமாயின் தமிழீழத் தனியரசை வழங்க வேண்டிவரும்.

இவ்வாறு சுவிஸ்லாந்து நாட்டின் உலகத் தமிழர் கல்விச் சேவையின் பரீட்சைப் பொறுப்பாளர் ந.விஜயகுமார் தெரிவித்தார்.

நேற்றுக்காலை மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலத்தில் சாவகச்சேரி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.தமிழ்மாறன் தலைமையில் நடைபெற்ற நாட்டுப் பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதியின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் உலகில் பல்வேறு நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

ஆனாலும் மிக உறுதியாக முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டம் புலிகளாலேயே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

விடுதலைப் போராட்டங்கள் நெல்சன் மண்டேலா போன்று தலைவர் பிரபாகரனும் உலகத் தலைவர்களால் மதிக்கப்படும் காலம் உருவாகும். சமாதான முயற்சிகள் சீர்குலைந்து மீண்டுமொரு யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டால் தமிழீழத்தை அடைந்து கொள்ளும் சக்தி விடுதலைப் புலிகளிடம் உண்டு என்றும் அவர் கூறினார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத் உட்பட போராளிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த)

# புலிகள் - படையினர் வவுனியாவில் சந்திப்பு

(வவுனியா)

வவுனியா பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் படையினரின புலனாய்வுப் பிரிவினரால் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பினருக்குமிடையில் வவுனியா கண்காணிப்பு குழு அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மாதாந்த சந்திப்பின் போதே விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவிடம் இவ்வாறு முறையிட்டனர்.

இச் சந்திப்பில் இராணுவத் தரப்பில் கேணல் நளின்விதானகே, கேணல் சேனநாயக்கா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.ஐ.மஸ்கின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.குருகே ஆகியோரும் புலிகள் தரப்பில் வவுனியா துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செங்கதிரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டு தொடர்பாக தாம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக சந்திப்பில் கலந்து கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உறுதி மொழி வழங்கினார். (த-13)

# காங்கேசன் ஊழியர்கள் ம.உ.ஆ.குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் ஆட்குறைப்பு நடவடிக்கையினால் பாதிப்படைந்த 152 ஊழியர்கள் தமக்கு நியாயமான முறையில் நஷ்டஈடு வழங்க வேண்டுமெனக் கோரி மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த யூன் முதலாம் திகதியில் இருந்து வேலையிலிருந்து நீக்கப்பட்ட இவர்கள் தமக்கு பழைய சுற்றுநிருபப்படி நஷ்டஈடு வழங்குவது தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஈடு கொடுக்காது எனவும் தற்போது வெளியிடப் பட்டுள்ள சுற்றுநிருப்பபடியே நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

இதேவேளை இன்று காலை யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர்.

கூட்டுத்தாபன ஊழியர்களுக்குப் பழைய சுற்றறிக்கையின் படி நஷ்டஈடாக மூன்று லட்சம் ரூபா முதல் மூன்றரை இலட்சம் ரூபா வரையும் புதிய சுற்றறிக்கையின் படி நாலரை இலட்சம் ரூபா முதல் 6 இலட்சம் ரூபா வரையிலும் நஷ்டஈடுவழங்கப்படுவது குறிப்பிடத் தக்கது (த-4)

### ...வரது...

தமிழினத்தின் நன்மைக்காகவும், விடிவுக்காகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. நான்கு தமிழ்க் கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்கள் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டிக் குறை கூறுவதை நிறுத்த வேண்டும்.

தற்போதைய நிலையில் வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும், வடக்குக் கிழக்கைப பிரிப்பதற்கு ஜனாதிபதி எடுத்து வரும் முயற்சிகள் குறித்து நாம் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம் என்றும இரா.சம்பந்தன் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### பகுதிநேர...

தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.க்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் சமுகம் கொடுத்திருந்தனர்.

### தமிழ்ச்செல்வன்...

திட்டவரைவு குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை சுவிஸ் சென்ற சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் அங்கு பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் இதனை அடுத்து அவர்கள் நாளை புதன்கிழமை அங்கிருந்து புறப்பட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை வன்னி வந்து சேர்வார்கள் என்றும் அதனைத் தொடர்ந்து பரிஸ் திட்டவரைவு குறித்து விடுதலைப் புலிகளின் தலைவருடன் ஆராய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## போக்குவரத்துக் கட்டணம் நேற்று முதல் உயர்வு

(யாழ்ப்பாணம்)

பருவகாலச் சீட்டுக்கான கட்டணங்களும், பேருந்துக் கட்டணங்களும் இலங்கை போக்குவரத்து சபையினால் நேற்றுமுதல் அதிகரிக்கப்பட்

## நினைவு தினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர்களான வி.தர்மலிங்கம் மு.ஆலாலசுந்தரம் ஆகியோரின் நினைவுதினக் கூட்டம் இன்று காலை 8.00 மணிக்கு கூட்டணியின் கொழும்புத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை வட்டுக்கோட்டை திருநாவுக்கரசுவின் 70வது பிறந்த நாள் நினைவு நிகழ்வு நேற்று கூட்டணியின் தலைமையகத்தில் நடைபெற்றது. (உ)

# பொங்கு தமிழ் எழுச்சி மன்னாரிலும் நடக்கும்

(மன்னார்)

மன்னாரில் அடுத்த மாதம் நடுப் பகுதியில் பொங்குதமிழ் எழுச்சி

வரும் 24-ந் திகதி வவுனியாவில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதேவேளை மன்னாரில் இடம்

### 100 பெண் ...

ரும் பாதுகாப்பு படையினரும் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் பெண் பேராளிகளை அழைத்துச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின்

க்களான செல்வம் அடைக்கல நாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் சமுகம் கொடுத்திருந்தனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்படும் வரை தமது மறியல் போராட்டமும் உண்ணாவிரதப் போராட்டமும் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

---

## புலிகள்...

யாற்றும் போது வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

காணி,மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணக்கூடிய அதிகாரங்களை விடுதலைப் புலிகளின் பாரிஸ் திட்டவரைபு கொண்டிருப்பதினாலும் விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்கால சபையில் இந்தியா தனது அழுத்தத்தை பிரயோகிக்கும் என்பதாலும், திட்ட வரைபை முன்கூட்டியே இந்தியாவின் பார்வைக்கு இலங்கை அரசு அனுப்பி வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

களும், பேருந்துக் கட்டணங்களும் இலங்கை போக்குவரத்து சபையினால் நேற்றுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி பழைய - புதிய கட்டண விபரம் வருமாறு: 5.00-6.00,6.00-7.00,7.00-8.00,7.50-9.00,9.00-11.00,10.00-11.50,10.50-13.00,11,50-14.00,12.00-15.00,13.00-16.00,14.00-17.00,14.50-17.50,15.00-18.00,16.00-19.50,17.00-20.00,18.00-21.00,18.50-22.00,19.00-23.50,20.00-25.00,21.00-25.50,22.00-26.00,23.00-27.50,24.00-29.00,25.00-30.00 என்ற அடிப்படையில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை இதே அடிப்படையில சிற்றூர்திப் பயணக்கட்டணங்களும் நேற்று முதல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## 24 மணி நேரத்தில் 103 பேர்கைது

(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர கொழும்பு பாதுகாப்பு நடவடிக்கையின் போது 103 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பாதுகாப்பு நடவடிக்கையின் போது 76 வீதித் தடைகளும் 44 ரோந்து நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டதுடன் இப்பணியில் பொலிசாருடன் இராணுத்தினரும் ஈடுபட்டதாகக் கொழும்புப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

(மன்னார்)

மன்னாரில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக எதிர் வரும் 24-ந் திகதி வவுனியாவில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதேவேளை மன்னாரில் இடம் பெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் அழைக்கப்படவுள்ளனர். (த-43)

இதேவேளை விடுதலைப் புலிகளின் பெண் பேராளிகளை அழைத்துச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வாகனம் ஒன்று ஹபறணப் பகுதியில் விபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

## படையினரின் திடீர் சோதனை

(திருநெல்வேலி)

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் படையினர் நேற்று மாலை திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்..

அதன்போது வீதியால் சென்ற வாகனங்கள் அனைத்தும் மறித்து சோதனை இடப்பட்டதுடன் பயணிகளின் அடையாள அட்டைகளும் பதிவு செய்யப்பட்டன. (த-43)


### வ.கி.பி.சபை முதலாம் இடம்

உள்ளூராட்சி வாரம் 2003 பிரதேச சபைகளின் சிறப்பு மலர்கள் சார்பாக சிறந்த தயாரிப்புக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச சபை நீர்வேலி, முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது

[C/6609]

### திருத்தப்பட்டது

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் கிராமிய விளையாட்டுப் போட்டி

அழைப்பிதழ்

முன்னர் மகாத்மா சனசமூக நிலையம் நாடாத்தும் கிராமிய விளையாட்டுப் போட்டி என்ற அழைப்பிதழை மேற்காட்டப்பட்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். மேற்படி கிராமிய விளையாட்டுப் போட்டி

இடம் :- மகாத்மா விளையாட்டு அரங்கு
காலம்:- 02.09.2003 - பி.ப.2.30 (பு .நே) செவ்வாய் (இன்று)
பிரதமவிருந்தினர்:- திரு.N.ரவிராஜ் (பா.உ)
தலைவர்:- திரு. சி.ஞானசேகரன் (மகாத்மா ச.ச.நி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்

மகாத்மா சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம், சாவல்கட்டு மக்களும்.

[C/6606]

### சிற்றூழியர்கள் தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு (பகல், இரவு) சிற்றூழியர்கள் தேவை. வயது 18தொடக்கம் 50வயது வரை. யாழ்.நகரத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் இருப்பவர்கள் மட்டும் 03.09.2003 நாளை புதன் கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

### உடன் தேவை

தமிழ்த் தட்டச்சு இயந்திரம் உடன் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

விளம்பர இல.100
மே/பா. வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

### யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் பவள விழாவையொட்டிய அங்குரார்ப்பண விழா

நாள்:- 2003 - 09 - 03 புதன்கிழமை காலை 10 மணி
இடம்:- கல்லூரி பிரதான மண்டபம்
தலைமை:- திரு.வி.மாணிக்கம் (அதிபர்)

நிகழ்வுகள்:-
* கொடியேற்றல்
* மங்கல விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* நிறுவுனர் திருவுருவப் படத்திற்கு மலர் மாலைஅணிதல்
  திருமதி யசோதரா நாகேந்திரன்
* வரவேற்புரை - திரு. இ. தவபாலன்
* அருளாசியுரைகள்:-
  1. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
  2. அருட்திரு. கலாநிதி மைக்கல் A.P.R.சௌந்தரநாயகம் (பங்குத் தந்தை யாழ். மரியன்னை பேராலயம்)
  3. திரு. கே.எம்.எஸ். ஹமீட்
* தலைமையுரை
* வாழ்த்துரைகள்
  1. திரு.நா.வரதராசா (பிரதிக் கல்விப் பணிப்பாளர்- யாழ்.வலயம்)
  2. திரு.சி.வி.கே.சிவஞானம் (தலைவர்.ப.மா.சங்கம்)
  3. திரு.சொ.மன்மதராசலிங்கம் (செயலாளர்.பா.அ.சங்கம்)
  4. திரு.வே.கருணாகரன்
  5. திரு. அ.குமரன் (தமிழ்க்குமரன்)
* நிறுவுனர் நினைவுப்பேருரை
  வழங்குபவர்:- திரு.க.சண்முகலிங்கம் (சமாதான நீதவான், இளைப்பாறிய அதிபர்)
* மாணவர் உரை
  வழங்குபவர்:- செல்வி ரம்யா உதயகுமார்
* கவிதாஞ்சலி
  வழங்குபவர்:- கவிமாமணி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்
* நன்றியுரை
  திரு. பூ.குகதாசன் (செயலாளர்.ப.மா.சங்கம்)
* கல்லூரிக் கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,ஊழியர்கள்,
பாடசாலைஅபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

[C/6608]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.